Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, SEPTEMBER 9 2024

திங்கட்கிழமை செப்டெம்பர் 09, 2024 | ஒளி: 10 கதிர்: 046 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## ஒய்வெடுக்குமாறு அறிவுரை



தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க சோர்வு காரணமாக காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், ஒய்வெடுக்குமாறு வைத்தியர்கள் அவரை அறிவுறுத்தியுள்ளனர்.

திஸாநாயக்கவுக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் பேரணியில் கலந்து கொள்ள முடியவில்லை என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா, மாத்தறை,

தொடர்ச்சி P2





# “மன்னிப்பு கேளுங்கள்”

**ரணிலும் அனுரவும் மாறி, மாறி கோருகின்றனர்**

இனவாதத்தை மக்கள் மத்தியில் தூண்டியமைக்காக வடக்கு மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்பு கோர வேண்டுமென ஜனாதிபதி வேட்பாளர்களான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க ஆகிய இருவரும் மாறி மாறி கோரியுள்ளனர்.

முன்னதாக யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க....

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க வடக்கில் தெரிவித்த கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியதையடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் அனுரவின் கருத்தை ஆதரித்துள்ளார்.

“தெற்கில் உள்ள மக்கள் மாற்றத்திற்காக அணிதிரளும் போது, அந்த மாற்றத்தை நீங்கள் எதிர்த்தால், தென்னிலங்கை மக்களின் மனநிலையை கற்பனை செய்து பாருங்கள். அந்த மாற்றத்தின் எதிர்ப்பாளர்களாக யாழ்ப்பாணம் பார்க்கப்படுவதை நீங்கள் விரும்புகிறீர்களா?” என திஸாநாயக்க கூறியிருந்தார்.

குறிப்பாக வடமாகாண மக்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில், இந்தக் கருத்துக்கள் அனுரவால் வெளியிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விமர்சித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## தலதா ரணிலுக்கு ஆதரவு

அண்மையில் பதவியை இராஜினாமா செய்த ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள, ஜனாதிபதி சுயேச்சை வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவு தெரிவித்து வெலிமடை நகரில் நடைபெற்ற “ரணிலால் முடியும்” வெற்றி பேரணியில் இணைந்து கொண்டார்.

## “ரணில்-அனுர கள்ளத்தொடர்பு”

ரணில் விக்ரமசிங்கமும், அனுரகுமார திசநாயக்கவும் புதிய அரசியல் திருமண விருந்து உண்ணுகின்றார்கள். இவர்கள் இருவருக்கும் நாட்டை கட்டி எழுப்ப வேண்டிய தேவை இல்லை. இவர்களில் ஒருவருக்கும் மக்களின் இதயத்துடிப்பு தெரிவதில்லை. 220 இலட்சம் மக்களின் எதிர்பார்ப்பு ஆசை, துன்பம், வேதனை, என்பவற்றையும் அறிவதில்லை. இவர்களில் மற்றவர் அனைத்தையும் சீரழிக்கின்ற எரியூட்டுகின்ற சமூக படுகொலைகளை முன்னிலைப்படுத்திச் செயற்படுகின்றவர். 200 ஆடைத் தொழிற்சாலைகளை உருவாக்குகின்ற பணி முன்னெடுக்கப்பட்ட போது துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து பிரேமதாச உருவாக்கும் ஆடை தொழிற்சாலைகளைத் தீயிட்டுக் கொளுத்துவதாக எச்சரிக்கை விடுத்தவர் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்த நாட்டை ராஜபக்சர்கள் சீரழித்து இந்த நாட்டிற்குள் பிளவை ஏற்படுவதிருக்கின்றார்கள். நாட்டை தீயிட்டுக் கொளுத்துகின்றவர்களுக்கு, கொலைகளைச் செய்கின்றவர்களுக்கு இந்த நாட்டை கட்டி எழுப்ப முடியாது.



தொடர்ச்சி P2

## “அனைத்து மதத்தினரின் உரிமைகளும் பாதுகாக்காப்படும்”

அரசியலமைப்பின் பிரகாரம், இலங்கையிலுள்ள அனைத்து மதத்தினரின் உரிமைகளையும் பாதுகாப்பதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நாடு எதிர்நோக்கும் தற்போதைய சவால்களை எதிர்கொள்வதில் ஆன்மீக வழிகாட்டலை உறுதிப்படுத்துவதற்கு அனைத்து மதங்களுக்கிடையிலான தொடர்ச்சியான ஒத்துழைப்பின் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2



## ‘அர்த்தமுள்ள பிரஜைகள்’ தேர்தல் விஞ்ஞாபனம்



மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் ஜனாதிபதி வேட்பாளருமான மயில்வாகனம் திலகராஜாவின் தேர்தல் கொள்கைப் பிரகடனம் நுவரெலியா, வட்டகொட, மடகொம்பரை, புதுக்காடு தோட்டத்தின் ஐந்தாம் இலக்க லயன் அறையில் சனிக்கிழமை(07) வெளியிடப்பட்டது. ‘அர்த்தமுள்ள பிரஜைகள்’ எனும் தலைப்பில் தேசிய,

தொடர்ச்சி P2

## மாணவர்களுக்கு கடன் திட்டம்




வட்டியில்லா கல்விக்கடன் திட்டத்தின் கீழ் இவ்வருடம் 7000 மாணவர்களுக்கு கடன் வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2

## பிரசாரம் செய்யத் தடை



ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் ஏனைய வேட்பாளர்களுக்காகப் பிரசாரம் செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தேசிய தேர்தல் ஆணைக்குழு தெளிவுபடுத்தியுள்ளது.

தேர்தல்கள் ஆணையாளர் சமன் ரத்நாயக்க ஊடகங்களுக்கு வெளியிட்ட கருத்தில்,இவ்வாறான செயற்பாடுகள் சட்டத்திற்குப் புறம்பானது மட்டுமன்றி நெறிமுறையற்ற செயல்களாகவே இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## “புலிகளை விட மிக மோசமான வேலைகளை செய்தவர்கள்”

**எச்.எம்.எம்.பர்ஸான்**

ஜே.வி.பி. என்பவர்கள் யார் என்பதை உங்களுடைய தாய், தந்தையர்களிடம் கேட்டுப் பாருங்கள் ஜேவிபி செய்த அட்டூழியங்களை அவர்கள் உங்களிடம் சொல்லுவார்கள் என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## நாமலின் கூட்டத்தில் விளையாட்டு துப்பாக்கி

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் வெலிமடை நகரிலுள்ள இந்திராணி திரையரங்கில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு விளையாட்டு துப்பாக்கியுடன் வந்த இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அம்பகஸ்தோவ பொலிஸார் தெரிவித்தனர்.

ஜனாதிபதி வேட்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தின் பாதுகாப்பிற்காக சுற்று வட்டார பொலிஸ் நிலையங்களின் அதிகாரிகளும் அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்த சந்திப்பின் போது, உவபரணகம பிரதேசத்தில் வசிக்கும் பாடசாலை மாணவர் மற்றும் பல்கலைக்கழக மாணவர் சந்திப்பு மண்டபத்திற்குள் நுழைய முற்பட்ட போது, அம்பகஸ்தோவ பொலிஸார் மற்றும் பண்டாரவளை விசேட குற்றத்தடுப்பு பிரிவினர் சோதனையிட்டனர்.

தொடர்ச்சி P2



## “தமிழரசுக் கட்சியின் முடிவு மக்களின் முடிவல்ல”



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இலங்கை தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவு வழங்கப் போவதாக எடுத்த முடிவு மக்களின் முடிவல்ல அது கட்சி சார்ந்த முடிவு என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தோவானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பாராளுமன்றத்தில் மாகாண சபை தேர்தல் தொடர்பான தனிநபர் பிரேரணை முன்வைத்திருந்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# "அனைத்து மதத்தினரின்...

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சனிக்கிழமை(07) நடைபெற்ற இலங்கையின் அப்போஸ்தலிக்க ஆயர் பதவிப் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

சுதந்திய கிறிஸ்தவ தேவாலயங்களுக்கான தேசிய ஒருங்கிணைப்பாளர் கலாநிதி கர்பி டி லெனரோல் ஆயர் தலைமையில் 160 மாணவர்களுக்குப் பதவிகளும் பட்டங்களும் வழங்கப்பட்டன.

நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலிருந்தும் இருந்து சுமார் 800 இலங்கை அப்போஸ்தலிக்க பாதிரிமார்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சில மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.

இன, மத விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தாம் தேர்தல் பணிகளை நடத்துவதில்லை எனவும், மதத்தை எப்போதும் அரசாங்கத்திலிருந்து பிரித்து வைத்து, அனைத்து மதத்தினருக்கும் சம வாய்ப்புகளை வழங்குவதே தமது நோக்கம் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள அனைத்து மத மக்களும் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து கவனம் செலுத்திய ஜனாதிபதி, டிஜிட்டல் மற்றும் தொழில்நுட்ப யுகத்தில் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் வாய்ப்புகள் குறித்தும் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச சுதந்திர அப்போஸ்தலிக்க மறைமாவட்ட ஆயர் பேரவையின் சிடொனின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கலாநிதி கிர்பி டி. லனரோல் அருட்தந்தைக்கு வாழ்த்து தெரிவித்து தனது உரையை ஆரம்பித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கடந்த தசாப்தத்தில் அப்போஸ்தலிக்க ஆயர் பீடத்திற்கு அருட்தந்தை லனரோல் ஆற்றிய பங்களிப்பையும் பாராட்டினார்.

நாட்டில் நிலவும் சமூகப் பொருளாதார நிலைமை குறித்து கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, மத விவகாரங்களில் கவனம் செலுத்துவதற்கு முன்னர் மக்களின் அடிப்படைத் தேவைகளுக்குத் தீர்வு காண்பதன் முக்கியத்துவம் குறித்தும் விளக்கமளித்தார்.

இலங்கையில் கிறிஸ்தவ சமூகத்தின் வெற்றிகளைப் பாராட்டிய ஜனாதிபதி, இயேசு கிறிஸ்துவின் போதனைகள் பல நூற்றாண்டுகளாக நாட்டில் எதிரொலிப்பதாகக் குறிப்பிட்டார். தமது மதத்தைக் கடைப்பிடிக்கும் சுதந்திரத்தைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும் அனைத்து மதத்தினருக்கும் சமமான வசதிகளை வழங்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

மத நடைமுறைகளின் எதிர்காலம் குறித்தும் இதன்போது கவனம் செலுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஒழுங்கமைக்கப்பட்ட மதங்களில் டிஜிட்டல் யுகம் மற்றும் செயற்கை நுண்ணறிவின் தாக்கம் என இரண்டு முக்கிய சவால்களைச் சுட்டிக்காட்டினார்.

யொஹெதஸ் குட்டன்பேர்க் கண்டுபிடித்த அச்சு இயந்திரம் போன்ற தொழில்நுட்பம் மத போதனைகளைப் பிரபலப்படுத்துவதில் வரலாற்று ரீதியாக முக்கிய பங்காற்றியுள்ளது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். எனினும், டிஜிட்டல் தளங்களின் எழுச்சி மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) மதங்களுக்கு ஏற்படுத்தக் கூடிய புதிய சிக்கல்கள் குறித்தும் ஜனாதிபதி கவனம் செலுத்தினார்.

குறிப்பாக டிஜிட்டல் ஊடகங்களால் பாதிக்கப்படும் இளைஞர்களுக்கு உளவியல் ரீதியான வழிகாட்டல்களை வழங்குவதன் முக்கியத்துவம் குறித்தும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, இளைஞர்கள் தொடர்பான அண்மைக்கால பிரச்சினைகளுக்குரிய நிகழ்வுகளை எடுத்துரைத்ததுடன், இப்பிரச்சினைகளைத் தீர்க்க மத மற்றும் சமூகத் தலைவர்களின் அவசியத்தை வலியுறுத்தினார்.

எதிர்வரும் காலங்களில் அனைவரும் ஒன்றிணைந்து இவ்விடயத்தைக் கருத்திற்கொண்டு செயற்படுவதே சிறந்ததெனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, மதப் பின்னணி எதுவாக இருந்தாலும், அனைத்து மக்களின் தேவைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டுமென வலியுறுத்தினார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி பணிக் குழாம் பிரதானியும், தேசியப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான சாகல ரத்நாயக்க, இலங்கையின் பொருளாதார சவால்கள் மற்றும் தற்போதைய நிலைமை தொடர்பான தகவல்களை முன்வைத்தார்.

பொருளாதார நெருக்கடியின் உச்சக்கட்டத்தில், நாடு முழுவதும் உள்ள மக்கள் எந்தவித மத, இன பாகுபாடும் இன்றி இன்னல்களை எதிர்கொண்டதாகச் சுட்டிக்காட்டினார். இக்கட்டான நேரத்தில் பொறுப்பேற்றமைக்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை பாராட்டிய சாகல ரத்நாயக்க, அவரது அமைதியான மற்றும் நம்பகமான தலைமைத்துவத்தையம் பாராட்டினார். மத்திய வங்கியின் சுதந்திரம், புதிய அரச நிதி முகாமைத்துவ சட்டங்கள் மற்றும் சர்வதேச ஊழல் எதிர்ப்பு சட்டமூலங்களை நிறைவேற்றியமை போன்ற குறிப்பிடத்தக்க மறுசீரமைப்புகள் பற்றி குறிப்பிடப்பட்ட சாகல ரத்நாயக்க, நாட்டை ஸ்திரப்படுத்தும் முயற்சியில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் குறிப்பிட்டார்.

காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, மேல் மாகாண ஆளுநர் மார்ஷல் ஒப் த எயார் ஃபோர்ஸ் ரொஷான் குணதிலக்க மற்றும் அப்போஸ்தலிக்க மறைமாவட்ட உறுப்பினர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# "மன்னிப்பு கேளுங்கள்"

ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த சுமந்திரன், திஸாநாயக்கவின் கருத்துக்கள் இனவாத தூண்டுதலானது என்ற கருத்தை மறுத்தார். "தோழர் அனுரகுமார இந்த வார்த்தைகளை இனவாத உணர்வை வெளிப்படுத்தும் நோக்கில் கூறியதாக நான் நினைக்கவில்லை. எனக்கும் அவரை நன்றாகத் தெரியும். அவர் அப்படிப்பட்ட ஒருவர் அல்ல" என சுமந்திரன் கூறினார். "உண்மையில், இந்த நாட்டில் இனவாதத்தை ஒழிப்பதில் அவர் மிகுந்த அக்கறை கொண்டுள்ளார். எனவே, இந்த விஷயத்தில் எங்களுக்கு வேறுபட்ட உணர்வுகள் இல்லை" என்றார்.

**அனுரகுமார திஸாநாயக்க,** யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பேரணியின் போது இனவாதத்தைத் தூண்டியமைக்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வடக்கு மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என தேசிய பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். நிறுவனங்களுக்கு இடையிலான நிறுவன ஊழியர் சங்கத்தின் (ICEU) 25ஆவது மாநாட்டில் உரையாற்றிய திஸாநாயக்க, வடக்கு மக்களுக்குத் தேவையற்ற செல்வாக்கை ஏற்படுத்தியதாகக் கூறி வடக்கு மக்களிடம் மன்னிப்பு கோருமாறு ஜனாதிபதி விக்ரமசிங்க சவால் விடுத்துள்ளார். ரணில் இத்தேர்தலில் இனவாதத்தைத் தூண்ட முயற்சிக்கிறார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கு நன்றி சொல்ல வேண்டும். ரணிலுக்கு அவர் சரியான பதிலை அளித்துள்ளார். ரணில் நீங்கள் இப்போது மன்னிப்பு கேட்க வேண்டும். நாட்டில் இனவாதத்தைத் தூண்டும் அரசியல் தற்போது இல்லை என திஸாநாயக்க தெரிவித்துள்ளார். நாட்டில் இனவாதத்தைத் தூண்டும் அரசியல் இப்போது செல்லுபடியாகாது, வெற்றியடைவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஓய்வெடுக்குமாறு...

தெய்யந்தரையில் நடைபெற்ற பேரணியில் தெரிவித்தார்.

"அனுரவுக்கு உடல்நிலை சரியில்லை, கடந்த சில நாட்களாக ஓய்வின்றி இருந்ததால் தற்போது சோர்வடைந்துள்ளார்.

அவர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இன்று (07) காலை அவரின் நிலை தீவிரமடைந்தது.

எனவே, ஒரு நாளாவது ஓய்வெடுக்குமாறு வைத்தியர்கள் அவரை அறிவுறுத்தியுள்ளனர்.

எனவே இன்று அவருக்கு ஓய்வு வழங்க முடிவு செய்துள்ளோம்" என்று அவர் பேரணியில் கூறினார். இதேவேளை திஸாநாயக்க சனிக்கிழமை (07) காலை கொழும்பில் நடைபெற்ற NPP சட்டத்தரணிகள் மாநாடு மற்றும் விளையாட்டு மாநாட்டில் கலந்துகொண்டார் அனுரகுமார திஸாநாயக்க சோர்வு காரணமாகக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் ஓய்வெடுக்குமாறு வைத்தியர்கள் அவரை அறிவுறுத்தியுள்ளனர்.

திஸாநாயக்கவுக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் பேரணியில் கலந்து கொள்ள முடியவில்லை என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா, மாத்தறை, தெய்யந்தரையில் நடைபெற்ற பேரணியில் தெரிவித்தார்.

"அனுரவுக்கு உடல்நிலை சரியில்லை, கடந்த சில நாட்களாக ஓய்வின்றி இருந்ததால் தற்போது சோர்வடைந்துள்ளார். அவர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இன்று (07) காலை அவரின் நிலை தீவிரமடைந்தது. எனவே, ஒரு நாளாவது ஓய்வெடுக்குமாறு வைத்தியர்கள் அவரை அறிவுறுத்தியுள்ளனர். எனவே இன்று அவருக்கு ஓய்வு வழங்க முடிவு செய்துள்ளோம்" என்று அவர் பேரணியில் கூறினார்.

இதேவேளை, திஸாநாயக்க நேற்று (07) காலை கொழும்பில் நடைபெற்ற NPP சட்டத்தரணிகள் மாநாடு மற்றும் விளையாட்டு மாநாட்டில் கலந்துகொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அர்த்தமுள்ள பிரஜைகள் தேர்தல் விஞ்ஞாபனம்

மலையக விடயப்பரப்புகளை உள்ளடக்கியதான இரண்டு பாகங்களைக் கொண்ட இந்தக் கொள்கை அறிக்கை மூன்று மொழிகளிலும் உள்ளடக்கங்களைக் கொண்டுள்ளது.

மலையக மண்ணில் இடம்பெறும் வெளியீட்டை அடுத்து 9 ஆம் திகதி கொழும்பு சர்வதேச பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெறும் பகிரங்க விவாத மேடையிலும், 10 ஆம் திகதி அரசாங்க ஊடகத் தகவல் நிலையத்திலிருந்து நேரலையாக நாட்டு மக்களுக்கும் திலகரினால் இந்த கொள்கை பிரடகனம் முன்வைக்கப்படும்

# பிரசாரம் செய்யத் தடை

இந்த வேட்பாளர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பொதுமக்கள் அறிந்திருக்கிறார்கள், எனவே பொதுமக்கள் தாங்களாகவே முடிவு செய்ய வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

பொதுத்துறையின் சம்பள திருத்தம் தொடர்பான அரசாங்கத்தின் அண்மைய அறிவிப்பு தொடர்பில் கவலை தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், அது தற்போது நடைபெற்று வரும் தபால் மூல வாக்களிப்பு நடவடிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய சாத்தியம் இருப்பதை ஏற்றுக்கொண்டார்.

# "புலிகளை விட மிக மோசமான வேலைகளை செய்தவர்கள்"

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரமதாசாவை ஆதரித்து மீராவோடை அமீர் அலி கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை (7) இடம்பெற்ற பெண்கள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த நாட்களில் ஜேவிபி இனர் விடுதலைப் புலிகள் செய்த வேலைத் திட்டத்தை விட மிக மோசமான காரியங்களைச் செய்தவர்களாகத்தான் இருந்தார்கள்.

அவர்கள் கடந்த காலத்தில் செய்த வேலைகளை நான் உங்களிடம் சொல்கின்றேன்.

கல்விமான்கள் 51 பேர், அரசியல்வாதிகள் 70 பேர், பாதுகாப்பு அதிகாரிகள் 209 பேர், பொலிஸ் அதிகாரிகள் 341 பேர், காவல்காரர்கள் 98 பேர், புலனாய்வுப் பிரிவினர் 310 பேர், மாற்றுக் கட்சி உறுப்பினர்கள் 1735 பேர், அரச அதிகாரிகள் 487 பேர், பௌத்த துறவிகள் உட்பட பயணிகள் 553 பேர்கள் கொல்லப்பட்டனர்.

அத்துடன், பஸ் நிலையம், அரச வாகனங்கள் 113, தனியார் வாகனம் 29, புகையிரதம் 16, புகையிரதப் பாதை 12, புகையிர நிலையம் 24, தபால் நிலையங்கள் 18, தகவல் பரிமாறும் நிலையம் 12, விவசாய விரிவாக்கல் நிலையம் 4, தேயிலை பெருந்தோட்டம் 73, தேயிலைத் தோட்ட பங்களா 38, மரக் கூட்டுத்தாபனம், உரக் கூட்டுத்தாபனம், பல பாடசாலைகள் போன்றவை எரிக்கப்பட்டன.

அரச வங்கிகள் 40 கொள்ளையடிக்கப்பட்டன. அரச அலுவலகம் 21, அரச வீடுகள் 107, பொலிஸ் நிலையங்கள் 29, தனியார் வீடுகள் 20, தனியார் நிலையங்கள் 33, சர்வோதைய நிலையங்கள் 5 ஆகியவை தீயிட்டு கொளுத்தப்பட்டன.

இதுதான் கடந்த காலத்தில் ஜேவிபி இந்த நாட்டில் செய்த அநியாயங்கள்.

இப்போது சில பிரதேசங்களில் சிலர் பேசுகிறார்கள் இந்த நாட்டில் எதிர்காலத்திலே ஜே.வி.பிக்கும் வாக்களிக்க வேண்டும் என்று.

ஜேவிபி செய்த அநியாயங்களை நீங்கள் உங்கள் கண் முன்னே கொண்டு வரவேண்டும் என்றார்.

இந்த நாட்டில் ஜனாதிபதியாக வரவுள்ள சஜித் பிரமதாசாவை ஆதரியுங்கள் என்று நாங்கள் உங்களிடம் எழுந்தமானை முறையில் சொல்லவில்லை.

முஸ்லிம் அரசியல் கட்சிகள், தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து எடுத்த தீர்மானத்துக்கு அமைவாகத்தான் சஜித் பிரமதாசாவை ஆதரியுங்கள் என்று சொல்கின்றோம் என்றார்.

இந்த பெண்கள் மாநாட்டில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

# நாமலின் கூட்டத்தில் விளையாட்டு துப்பாக்கி

இளைஞர்களிடம் பிளாஸ்டிக் கைத்துப்பாக்கி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, அவர்கள் கைது செய்யப்பட்டு வெலிமடை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக அம்பகஸ்தோவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.எம். எஸ்.ரத்நாயக்க தெரிவித்தார்.

கூட்ட அரங்கில் பெற்றோர்கள் இருந்ததால் தாம் வீடு திரும்புவதாகத் தெரிவிக்கவே கூட்ட அரங்கிற்கு வந்ததாக மாணவர்கள் தங்களிடம் தெரிவித்தனர் என வெலிமடை பொலிஸார் தெரிவித்தனர்.

# "தமிழரசுக் கட்சியின்...

அது தொடர்பான விவாதங்கள் பாராளுமன்றத்தில் இடம்பெற்று வரும் நிலையில், தமிழ் கட்சிகள் ரணில் விக்ரமசிங்கவை அண்மையில் சந்தித்தபோது குறித்த பிரேரணையை நிறைவேற்றுவது தொடர்பில் சாதகமான கருத்துக்களை முன்வைத்ததாக அறிகிறேன்.

இவ்வாறான நிலையில் இறுதியாக இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் சுமந்திரனால் கொண்டுவரப்பட்ட மாகாண சபை தொடர்பான தனிநபர் பிரேரணை ஒத்திவைக்கப்பட்டது.

இந்த இந்த ஒத்திவைப்பு சிலவேளை, தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவு வழங்கப் போவதான அறிவிப்பு வெளியாகியமை தாக்கத்தைச் செலுத்தி இருக்கலாம்.

ஏனெனில், தற்போது ஜனாதிபதி தேர்தலுக்கான பிரச்சாரங்கள் இடம்பெற்றுள்ள நிலையில், மாகாண சபை தொடர்பான விவாதம் சிலருக்குத் தேவையாக இருக்கலாம் மற்றொரு தரப்பினர் அதை விரும்பாமல் இருக்கலாம்.

இருந்தாலும் தமிழரசு கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கொண்டு வந்த மாகாண சபை தேர்தல் தொடர்பான தனிநபர் பிரேரணை இறுதியாக இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் எடுத்துக் கொள்ளப்படுகிறது என தெரிந்தும் அதற்கு முன்னரே சஜித் பிரேமதாசவின் ஆதரவு அறிவிப்பைச் சுமந்திரன் வெளிப்படுத்தி விட்டார்.

தமிழரசு கட்சி சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவு வழங்கப் போவதாக எடுத்த முடிவு மக்களின் முடிவல்ல அது கட்சி சார்ந்த முடிவு.

தற்போது ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரங்கள் இடம் பெற்று வரும் நிலையில் பாராளுமன்றத்தில் மாகாண சபை தேர்தல் தொடர்பான முடிவுகள் சாதகமாக அமையும் நிலையில் தமிழ் தலைமைகளின் சந்தர்ப்பவாத அரசியல் தமிழ் மக்களைப் பின்னோக்கி நகர்த்துகிறது.

13 வது திருத்தம் தமிழ் மக்களின் அரசியலுக்கான



ஆரம்பப் புள்ளி என அன்றிலிருந்து அதே நிலைப்பாட்டையே கூறி வருகிறேன்.

ஆனால் தமிழ் மக்களை ஏகப்பிரதிநிதிகள் என கூறுவோர் 13-ஐ தும்புக்கட்டையாலும் தொட்டுப் பாக்க மாட்டோம் என கூறிவிட்டுக் கடந்த மாகாண சபையில் தமிழ் இனத்தைப் பெற்றுத் தரப் போகிறோம் என மக்களை உசுப்பேற்று வாக்குகளைப் பெற்றார்கள்.

இறுதியில் மாகாண சபையை நடத்த முடியாமல் கட்சி ரீதியாகப் பிரிந்து நின்று சண்டை பிடித்ததும் தமக்கு ஆடம்பர வாகனம் வேண்டும் என அயல்நாடு ஒன்றுக்குக் கடிதம் அனுப்பியதுமே நடந்தது.

சக தமிழ் காட்சிகள் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வினை வழங்க விடாது தமது அரசியல் இருப்பு கலை தக்க வைத்துக் கொள்வதற்காகக் காலத்துக்குக் காலம் மக்களை உசுப்பேற்றி அரசியல் நாடகம் நடத்தி வருகிறார்கள்.

இனியும் அவர்களின் நாடகத்தை மக்கள் நம்ப மாட்டார்கள். ஏனெனில், கடந்த பாராளுமன்ற தேர்தலில் அதற்கான பதில்களை மக்கள் தமது வாக்குகளால் வழங்கியுள்ளார்கள்.

எனது அரசியல் பயணம் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு அன்றாட பிரச்சனை மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றை மக்களிடம் கொண்டு சேர்ப்பதே எனது இலக்கு.

ஆகவே தமிழ் மக்கள் தமக்கான ஜனாதிபதியைத் தீர்மானித்துள்ள நிலையில் எதிர்வரும் 21ஆம் திகதி சிறந்த ஒரு முடிவை எடுப்பார்கள் என நம்புவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

# "ரணில் – அனுர....

ரணில் விக்ரமசிங்கவுக்கும் அனுரகுமார திசாநாயக்கவிற்கும் ஐக்கிய மக்கள் சக்தி அதிகாரத்திற்கு வந்து நாட்டிற்குச் சேவை செய்யும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். 2024 ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் கூட்டணி ஏற்பாடு செய்த 36ஆவது மக்கள் வெற்றி பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் வெள்ளிக்கிழமை(06) மாலை ஹோமாகம நகரில் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. இதில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.இந்தத் தேர்தலில் பிரிகோடு தெளிவாக விளங்குகின்றது. இந்த நாட்டிலுள்ள 220 இலட்சம் மக்களும் ரணில் விக்ரமசிங்கவினதும், அனுரா குமார திசாநாயக்கவினதும் அரசியல் கூட்டை சரியாக விளங்கிக் கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் இருவரினது நோக்கம் சஜித் பிரேமதாசவை தோல்வி அடையச் செய்வதாகும். அவர்களின் நோக்கம் அப்படி இருந்தாலும், தமதும் ஐக்கிய மக்கள் சக்தியினதும், ஐக்கிய மக்கள் கூட்டணியினதும் பொதுவான நோக்கம் வீழ்ச்சி அடைந்திருக்கின்ற இந்த நாட்டை இந்த மிகப்பெரிய அனர்த்தத்திலிருந்து மீட்டெடுத்து, சுபிட்சமான நாளைய தினத்திற்காக 2020 இலட்சம் மக்களையும் முன்னெடுத்துச் செல்வது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். அதிகாரம் இல்லாமல் சேவை செய்த ஒரே கட்சி எமது கட்சியே.

76 வருட வரலாற்றுக் காலத்தில் அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களின் வரிப்பணத்திலே மக்களுக்குச் சேவை செய்யப்பட்டிருக்கின்றது. ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியிலிருந்து கொண்டு, கடந்த நான்கு வருட காலமாக ஒரு பில்லியன் ரூபா பெறுமதியை இந்த நாட்டின் கல்வி சேவைக்கும் சுகாதார சேவைக்கும் ஒதுக்கி சேவை செய்திருக்கின்றது. நாட்டு மக்களைத் துன்பத்திலிருந்து மீட்டெடுப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தியால் முடியும். ஊழலையும் மோசடியையும் திருட்டையும் ஒழித்து திருடர்கள் இந்த நாட்டிலிருந்து திருடிய பணத்தையும் மீளவும் நாட்டுக்குப் பெற்றுக் கொள்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுக்கும் என எதிர்க்கட்சித் தலைவர் இங்குத் தெரிவித்தார். அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் முறையாகப் பேணப்படும்.அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் டிஜிட்டல் முறை ஊடாக அனைவருக்கும் பார்க்க கூடிய வகையில் மேற்கொள்ளப்படும்.

அனைத்து அரச செலவினங்கள் தொடர்பிலும் தகவல்களை அறிந்து கொள்வதற்கான உரிமையை வழங்குவோம். விலை மனு கோரல் முறையிலிருந்து விலகிச் செயற்பட மாட்டோம்.ஜனாதிபதியினதோ அல்லது பிரதமரின் அல்லது அமைச்சர்களினதோ தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப நட்பு வட்டாரங்களுக்கும், நிறுவனங்களுக்கும் சாதகமாக அமைகின்ற வகையில் விலை மனுக் கோரல்கள் இடம்பெறுவதற்கு இடமளிக்க மாட்டோம். ஊழல் இல்லாத சுவர்ணமயமான ஒரு யுகத்தை உருவாக்குவோம் என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.



# மாணவர்களுக்கு கடன் திட்டம்

இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 9ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை சமர்ப்பிக்க முடியும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இந்த ஆண்டு அதிகபட்சமாக பதினைந்து லட்சம் ரூபாய் வரை ஐந்து பிரிவுகளின் கீழ் கடன் பெறலாம் என்றும் பதினெட்டு உயர்கல்வி நிறுவனங்களில் பட்டப் படிப்புகளுக்கு மாணவர்கள் விண்ணப்பிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# “திருடர்களை இணைக்காமல் வெற்றி பெற முடியாது”

■ பாறுக் ஷிஹான்

அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக சஜித் பிரேமதாச வாக்குறுதியளித்துள்ளதாக செய்திகள் வெளியான வண்ணம் உள்ளன. எனவே, இதற்கான தெளிவான பதிலை சஜித்துடனுள்ள ரவூப் ஹக்கீம் ரிஷாத் பதியுதீனும் முஸ்லிம் சமூகத்துக்கு வழங்க வேண்டுமென ஸ்ரீலங்கா உலமா கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சமகால அரசியல் தொடர்பாக ஸ்ரீலங்கா உலமா கட்சி தலைவர் - முபாறக் அப்துல் மஜீத் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

மேலும் அந்த செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

ரவூப் ஹக்கீம் என்பவர் முஸ்லிம் சமூகத்தின் துரோகி என்று 2001ஆம் ஆண்டு முதல் பகிரங்கமாக சொல்லி வருகிறேன். 2001ஆம் ஆண்டு அதாவுள்ளாவும் ஹக்கீமுடன்தான் இருந்தார். அப்போதெல்லாம் எங்களைத் தூற்றிய பழைய, புதிய முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்காரர்கள், இப்போது ஹக்கீமை தூற்றுகிறார்கள். எனினும், உண்மை மிகத் தாமதமாகத்தான் புரிய வரும். அது போன்று தான் முஸ்லிம் காங்கிரஸ் போன்ற திருட்டு கட்சிக்காரர்களை சேர்க்கமாட்டோம் என ஜே.வி.பி. அனுரகுமார பேசி வந்தார். ஆனால், இப்போது அதாவுல்லாவின் கட்சியில் மாகாண



சபை உறுப்பினராக இருந்து பின்னர் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து அதன் தலைமை நிர்வாகத்தில் இருந்த ஒருவரை தேசிய மக்கள் சக்தி தன்னோடு இணைத்துக்கொண்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அவ்வாறாயின், ஏமாற்று கட்சியில் இருந்து கொண்டு சமூகத்தின் வாக்குகளை விற்று, சுக போகம் அனுபவித்த கட்சியின் அனைத்து செயல்களுக்கும் துணை போய் விட்டு, இப்போது கட்சி மாறினால் நல்லவரா? இப்படியானவர்களை தேசிய மக்கள் சக்தியில் இணைப்பதன் மூலம் தற்போது அனுரகுமார தன் கொள்கையிலிருந்து விலகி திருடர்களை இணைக்காமல் வெற்றியைப்பெற முடியாது என்ற நிலைக்கு வந்துள்ளாரா? என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். இது தவிர, இதைத்தான் நாம் சொல்கிறோம் மாற்றம் என்பது ஆட்களை மாற்றுவதால் ஏற்படாது, நல்ல அரசியலை உருவாக்கும் மன மாற்றம் மக்கள் மனதிலும் அரசியல்வாதிகள் உள்ளத்திலும் வரவேண்டும். பாத்திரங்கள் வேறு, கள்ளு ஒன்றுதான். என்பதை மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களில் மஹிந்த ராஜபக்ஷவின் கட்சி செயலாளராக இருந்த மைத்திரி பல்டி அடித்ததும் அவர் நல்லவராகிவிட மாட்டார் என அப்போதே சொன்ன ஒரேயொரு முஸ்லிம் கட்சி உலமா கட்சியாகும்.

ஆனால், இல்லையில்லை என முஸ்லிம் சமூகம் மறுத்து செத்துப்போனவனும் வந்து மைத்திரிக்கு ஓட்டுப்போட்டான். கடைசியில் மஹிந்த ஆட்சியைவிட மோசமானது ஹக்கீம் ரிசாத் தமிழ் கூட்டமைப்பு முட்டுக்கொடுத்த மைத்திரி ஆட்சி என்பது எல்லோரும் அறிந்த உண்மை. மேலும் ஒரு கட்சியில் இருந்து சுக போகம் அனுபவித்து விட்டு சந்தர்ப்பத்துக்கு கட்சி மாறுபவன் நிச்சயம் பெரும் மோசடிக்காரன். இப்படியான இன்னும் பல மோசடிக்காரர்கள் தேசிய மக்கள் சக்தியில் (ஜே.வி.பி) இணைந்து மீண்டும் மைத்திரி ஆட்சி போல் திருட்டு ஆட்சியே ஏற்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தங்க பிஸ்கெட்களுடன் ஒருவர் கைது

தங்க பிஸ்கெட்களை தனது காற்சட்டைப் பையில் மறைத்து வைத்து கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு முனையத்தில் காத்திருந்த 29 வயதான விமானப் பயணி ஒருவரை விமான நிலைய குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

சுமார் மூன்று கோடி ரூபாய் பெறுமதியான தங்க பிஸ்கெட்டுகளுடன் கைதான நபர், இந்தியாவிலிருந்து அடிக்கடி விமானத்தில் பயணம் செய்பவர் எனவும் கூறப்படுகின்றது.

அவர் புறப்பாடு



முனையத்திலிருந்து, விமானப் பயணிகள் முனையத்திற்குச் சென்று கொண்டிருந்த போது, குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் அவரது கால்சட்டைப் பையில் ஒரு சிறிய பையில் 01 கிலோ 158 கிராம் எடையுள்ள 09 தங்க பிஸ்கெட்டுகளையும் மேலும் 03 தங்க பிஸ்கெட்டுகளையும் மீட்டுள்ளனர். இதனையடுத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த நபரையும், அவரிடம் இருந்த தங்க பிஸ்கெட்டுகளையும் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## வாக்குச்சீட்டை ஒளிப்படம் எடுத்த அதிபர் கைது

முல்லைத்தீவில் வாக்குச்சீட்டில் புள்ளடியிட்ட பின்பு, வாக்குச் சீட்டை ஒளிப்படம் எடுத்த குற்றச்சாட்டில் அதிபர் ஒருவர் சனிக்கிழமை (07) கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நடவடிக்கைகள் கடந்த 04,05.06 ஆகிய திகதிகளில் நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வந்த நிலையில், வெள்ளிக்கிழமை (06) முல்லைத்தீவு மாவட்டத்தின், முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்தில் வாக்களிக்கத் தயார் செய்யப்பட்ட ஆறு வாக்கெடுப்பு நிலையங்களில் முதலாவது வாக்கெடுப்பு நிலையத்துக்கு பொறுப்பாக இருந்த புதுக்குடியிருப்பு பகுதியில் உள்ள ஒரு பாடசாலையில் அதிபர் (வயது 56) தனது வாக்கை அளிப்பதற்காக வாக்குச்சீட்டைப் புள்ளடியிட்ட பின்னர் தனது கைத்தொலைபேசி மூலம் ஒளிப்படம் எடுத்துள்ளார்.

இதனை அவதானித்த தேர்தல் கடமையில் இருந்த குறித்த நிலையத்துக்கு பொறுப்பான ARO மேற்படி விடயமாக முல்லைத்தீவு தேர்தல்கள் அலுவலகத்துக்கு தகவல் வழங்கியதன் அடிப்படையில், அங்கு வந்த தேர்தல் திணைக்கள அதிகாரிகள் குறித்த அதிபரின் தொலைபேசியை பெற்றுக்கொண்ட தோடு, இது தொடர்பில் பொலிஸாரிடம் பாரப்படுத்தினர்

இந்நிலையில், குறித்த அதிபரை பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## வாகனங்களுக்கு தீ வைப்பு; பெண் வைத்தியசாலையில் அனுமதி

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் வன்முறை கும்பல் ஒன்று, வேன் மற்றும் காருக்கு தீ வைத்துள்ள சம்பவம் ஒன்று சனிக்கிழமை(07) இரவு இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் - கோப்பாய் பகுதியில் வீடொன்றின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேன் மற்றும் கார் மீது, மோட்டார் சைக்கிளில் வந்த இரு நபர்கள் தாக்குதலை மேற்கொண்டு, வாகனங்களுக்கு தீ வைத்துவிட்டு தப்பி சென்றுள்ளனர்.

அதனை கண்ணுற்ற வீட்டார், தீயினை அணைக்க முயன்ற போது, வாகன உரிமையாளரின் தாய் தீக்காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் .

இச்சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக தெரியவந்துள்ளது.

## வைத்தியசாலைக்கு தேசிய விருதுகள்

■ எஸ்.ஆர்.லெம்பேட்

உலக சுகாதார நிறுவனத்தினால் வருடாந்தம் அனுஷ்டிக்கப்படும் ‘சர்வதேச நோயாளர் பாதுகாப்பு’ தினத்தை முன்னிட்டு சுகாதார அமைச்சின் சுகாதார தரம் மற்றும் பாதுகாப்பு பணியகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய நிகழ்வு சனிக்கிழமை (7) கொழும்பில் இடம் பெற்றுள்ளது.

இதன்போது, மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு நோயாளிகள் பாதுகாப்பு சம்பந்தமான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்திய வைத்தியசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில்



இரு சிறப்பு விருதுகள் கிடைத்துள்ளன.

இரு நூற்றுக்கும் மேற்பட்ட மத்திய மற்றும் மாகாண சுகாதார நிறுவனங்களுக்குள் அகில இலங்கை ரீதியில் இடம்பெற்ற போட்டியில் வட மாகாணத்தில் இருந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை மாத்திரமே இந்த சிறப்பு விருதை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கான பிரதிநிதி வைத்தியர் அலோகா சிங்கா, சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பாலித மஹிபால மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் கலந்து கொண்ட இந்நிகழ்வில், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அஸாத் எம்.ஹனீபா விருதுகளைப் பெற்றுக்கொண்டுள்ளார்.



### கழிவறை குழியில்

## சிறுத்தை குட்டி மீட்பு

■ செ.தி.பெருமாள்

மஸ்கெலியா- பண்ணியன் தனியார் தோட்டத்தில் கழிவறை குழிக்குள் சிறுத்தை குட்டியொன்று மீட்கப்பட்டுள்ளது.

கழிவறை குழிக்குள் உயிருடன் சிறுத்தை குட்டியொன்று இருப்பதாகத் தோட்டத் தொழிலாளர்கள் நிர்வாகியிடம் தெரிவித்துள்ளதையடுத்து, அவர் மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து, நல்லத்தண்ணி வனத்துறை அதிகாரிகளுக்கு அறிவித்ததைத் தொடர்ந்து, சம்பவ இடத்திற்கு வரைந்த அவர்கள் சிறுத்தை குட்டியை மீட்டுள்ளனர்.

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

■ எம்.எப்.றிபாஸ்

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒலுவில் பிரதேசத்தில் இருந்து சுமார் 58,270 மில்லி கிராம் கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் சனிக்கிழமை (08) அன்று முன்னிறுத்தியபோது, எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருவதாக தெரியவந்துள்ளது.



















## சதா சகாய மாதா திருத்தல திருவிழா

■ பேரின்பராஜா சபேஷ்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் புராதானமானதும் பழைமையானதுமான ஆயித்தியமலை புனித சதா சகாய மாதா திருத்தல திருவிழா கடந்த ஆகஸ்ட் 30ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, ஞாயிற்றுக்கிழமை (8) மட்டக்களப்பு மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகையின் தலைமையில் விசேட ஆராதனை, திருவிழா மற்றும் இறுதிநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நிறைவு பெற்றது.

# அமைதியான சமூகத்துக்கு அடித்தளம் அமைப்பது அவசியம்

உலகம் முழுவதும் எழுத்தறிவின்மையை வேருடன் அகற்றும் நோக்கத்தில் யுனெஸ்கோவின் ஐ.நா. கல்வி அறிவியல் கலாசார அமைப்பு சார்பில், 'சர்வதேச எழுத்தறிவு தினம்' 1967 முதல் ஆண்டுதோறும் செப்டெம்பர் மாதம் 8ஆம் திகதி கொண்டாடப்பட்டு வருகிறது.

"உலகின் மாற்றத்திற்காக எழுத்தறிவை ஊக்குவிக்க வேண்டும். நிலையான மற்றும் அமைதியான சமூகத்துக்கு அடித்தளம் அமைப்பது" என்பது இந்தாண்டுக்கான கருப்பொருள் ஆகும்.

இந்த எழுத்தறிவு தினத்திற்கு வரலாறும் உண்டு.

மனித குலத்தின் முன்னேற்றங்களுக்கு எழுத்தறிவானது மிகப்பெரிய தடையாக இருப்பதை உலக நாடுகள் உணர்ந்தன.

இதையடுத்து, 1965இல் ஈரான் தலைநகர் டெக்ரானில், உலக நாடுகளின் கல்வி அமைச்சர்களின் மாநாடு ஒன்று நடைபெற்றது. இந்த மாநாட்டில், எழுத்தறிவின்மையால் உலக நாடுகளில் ஏற்படும் அரசியல், சமூக, பொருளாதார பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

உலகிலிருந்து எழுத்தறிவின்மையை அறவே ஒழிக்கத் தேவையான அனைத்து பணிகளையும், நடவடிக்கைகளையும் பட்டியலிட்டு அறிக்கை அளித்தது.

இதையடுத்து, 1966 நவம்பர் 17ஆம் திகதி நடத்திய யுனெஸ்கோவின் 14ஆவது பொதுக்குழுவில், எழுத்தறிவின்மையை போக்குவதற்காக மாநாடு நடைபெற்ற செப்டெம்பர் 8ஆம் திகதியைச் சர்வதேச எழுத்தறிவு தினமாக அறிவிக்கப்பட்டது.

தொடர்ந்து, 1967இல் முதல் ஒவ்வொரு ஆண்டும் செப்டெம்பர் 8ஆம் திகதி சர்வதேச எழுத்தறிவு தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆண்டுகள் செல்லச்செல்ல எழுத்தறிவின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டு உலக நாடுகள் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்தனர்.

மொத்தத்தில், உலக நாடுகள் எடுத்த முயற்சிகளால், சர்வதேச அளவில் எழுத்தறிவு விகிதம் அதிகரித்துள்ளது. குறைந்தபட்சம்

15 வயதுக்குட்பட்ட அனைத்து ஆண் மற்றும் பெண்களின் கல்வியறிவு 86.3 சதவீதமாகவும், 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட ஆண்களின் கல்வியறிவு 90 சதவீதமாகவும் உள்ளது.

அதே சமயம் உலகளவில் பெண்கள் 82.7 சதமாக சற்று பின்தங்கிய நிலையில் உள்ளனர். இருப்பினும், நாட்டிற்கு நாடு பெரியளவில் வேறுபாடுகள் உள்ளன.

அந்டோரா, பின்லாந்து, லிச்டென்ஸ்டென், லக்சம்பர்க், வடகொரியா, நோர்வே மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகள் 100 சதவீதம் எழுத்தறிவு பெற்றுள்ளன.

உலகம் முழுவதும் ஆண்டுதோறும் எழுத்தறிவின் அவசியத்தை உணர்த்துவதற்காக எழுத்தறிவு தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

எழுத்தறிவு பெற்றவர்களின் எண்ணிக்கையை அதிகரித்து, மனித உரிமையை நிலைநாட்ட இந்த தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

உலகம் முழுவதும் நிலையான வளர்ச்சியை எட்டியபோதிலும், எழுத்தறிவு என்பது இன்னும் சவாலாக உள்ளது.

2020இல் கணக்கெடுப்பின்படி,

763 மில்லியன் இளைஞர்கள் அடிப்படை எழுத்தறிவில்லாதவர்களாக இருக்கிறார்கள். அண்மைக்கால கொவிட்-19, பருவநிலை மாற்றம், போர் போன்ற சூழல்கள் சவால்களை அதிகப்படுத்துகிறது.

நமது நாட்டை பொறுத்தவரையில்,

2021 புள்ளிவிபரவியல் தகவல்களின் பிரகாரம், எழுத்தறிவு 93.3 சதவீதமாக இருந்தது. ஆண்களின் எழுத்தறிவு சதவீதம் 94.3 ஆகவும், பெண்களின் எழுத்தறிவு சதவீதம் 92.3 ஆகவும் இருந்தது. ஆகையால் சர்வதேச எழுத்தறிவு தினம் தொனிப்பொருளான 'அமைதியான சமூகத்துக்கு அடித்தளம்' அமைப்பதை நாமும் வலியுறுத்துகின்றோம்.




தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

இருண்ட மனதைப் போக்கினால் தான் இன்பம் சூழும். இதற்கு என்ன வழி?

மக்கள் சேவைக்குள் புகுந்துவிடுக. உண்மையான மக்கள் சேவையே, மகேசன் சேவை என்பதை உணர்வீர்கள். இதயத்தில் நிம்மதி ஒளிவிடும். தன்னை மறந்து, புது உலகில் தவழ, இந்த வழியையே, புத்திசாலிகள் விருப்பத்துடன் செய்கின்றார்கள்.

உங்கள் உடல் வலுவுக்கு ஏற்ப, விரும்பும் நற்செயலுடன் இணைக. சிறிது நேரமாவது செய்யும் நற்காரியங்கள், விஸ்வரூபமாக மாறும், செய் கருமங்களும் பெருகும்.

உங்களை நோக்குபவர்கள், உங்களுடன் தொடர்ந்து பயணிப்பார்கள். செய்து பாருங்கள்! அதன் புதுமையும் அற்புதங்களும் நன்கு புரியும்.

எங்களால் யாராவது, நல்ல பயனைக் கண்டால், அதைவிடத் திருப்தி ஏது? சமானிய மனிதன், மகா மனிதனாக மாறியது, இதுபோல என்பதை அறிவீர்களா?

வாழும் வழியைச் சுலபமாக்குங்கள். நிம்மதியுடனும் மகிழ்ச்சியுடனும் வாழும் வழியைத் தேர்ந்தெடுங்கள். நல்லதைச் செய்ய ஏது சுணக்கம்? உடன் எழுக.

நன்றி-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# யார் ஜனாதிபதி?

லக்ஸ்மன்

இலங்கையின் அடுத்த ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் யாருக்கு வெற்றி கிடைக்கும் என்பதுதான் இப்போது அனைவருடைய சிந்தனையும் பேச்சுமாக இருக்கிறது. அத்துடன், ஒவ்வொருவருடைய சிந்தனையிலும் உள்ள கொள்கைகளுக்கும், ஏற்றுக்கொள்ளல்களுக்குமேற்ப வரவுள்ள ஜனாதிபதி தொடர்பில் கவலைகளும் இருக்கின்றன. அது தம்முடைய தீர்மானம் தோற்றுப்போனால் எப்படி இருக்கும் என்பதற்குள் அடக்கம். நடைபெற்று வருகின்ற தேர்தல் பிரசாரங்கள் ஆதரவுக் கூட்டங்களும், அறிவிப்புகளும் பல்வேறு வகைகளிலும் நாடு பூராகவும் தாக்கங்களைச் செலுத்தி வருகின்றன. தென்பகுதியில் உள்ள கட்சிகளின் அறிவிப்பு, தனிப்பட்ட அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாணசபை ஆளுநர்கள், முதலமைச்சர்கள், அமைச்சர்கள் என வெளியிடப்படும் ஆதரவுகளுக்கு இருக்கின்ற பிரதிபலிப்புகள், தென்பகுதியில் ஏற்படுத்தும் தாக்கத்தினை விடவும் சிறுபான்மைக் கட்சிகள், தமிழ்க் கட்சிகளின் ஆதரவுகள் சற்று வித்தியாசமாகவே தாக்கம் செலுத்தும். அந்த வகையில்தான், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிற்கு இலங்கை தமிழரசுக் கட்சி ஆதரவினை அறிவித்தமையும் பார்க்கப்பட வேண்டும். அது வடக்கு, கிழக்கில் பெரும் அலையொன்றைக் கிளப்பி விட்டது என்று சொல்வதற்கில்லை. ஏனென்றால், உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பின் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து இலங்கைத் தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடுவதாக அறிவித்து. அக் கூட்டிலிருந்து தானாகவே வெளியேறிக் கொண்டதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போதில்லை என்பதும் தமிழ் மக்களுக்குத் தெரிந்ததே. அதனால் ஒட்டு மொத்த தமிழர்களும் அக்கட்சியின் அறிவிப்பினை கடைப்பிடிப்பார்கள் என்றில்லை. ஆனால் தென் பகுதி, சிங்கள மக்களைப் பொறுத்தவரையில், இலங்கைத் தமிழரசுக் கட்சி என்பது தெமள சந்தான - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே. அந்த வகையில், தமிழர்களுக்கான உரிமை சார் விடயங்களில் இனவாதம் தலைதூக்கும். அத்துடன், சஜித்துக்கு எதிரான ஏனைய வேட்பாளர்களின் இனவாதப் பிரசாரங்களுக்கு வழிவகுக்கும். அந்த வகையில் அவரது வெற்றிக்கான பிரசாரத்திற்கு குறிப்பிடத்தக்க ஊக்கத்தை வழங்கும் என்று சொல்ல முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய அங்கத்துவக் கட்சி என்ற வகையில், தமிழர்களின் வாக்குகளைத் திரட்டும் திறனின் அடிப்படையில், தமிழரசுக் கட்சி கணிசமான அரசியல் பலத்தைக் கொண்டுள்ளது என்றே அக்கட்சியும் நம்பிக்கை கொண்டுள்ளது. அந்த நம்பிக்கை இத் தேர்தலில் சந்தேகமானதே. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சஜித் பிரேமதாசவிற்கு ஆதரவு எவ்வாறிருக்கிறதோ அதுபோன்று ஏனைய தமிழ்த் தரப்புகளின் சஜித்துக்கான ஆதரவளிப்புகளும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிப்புகளுமாகும். குறிப்பாக, இலங்கை தமிழரசுக் கட்சி இல்லாத ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி, மலையகத்தின் அரசியல் தரப்புகள், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, பிள்ளையான் எனப்படும் இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன், கடந்த முறை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் போட்டியிட்ட, தற்போது தன்னை முற்போக்கு தமிழர் அமைப்பாகக் காட்டிக் கொள்ளும் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் ஏனைய முஸ்லிம் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதிநிதிகளது ஆதரவுகளைக் குறிப்பிட முடியும். இதற்கிடையில், மலையகப் பிரதேசங்களினைப் பொறுத்தவரையில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உள்ளிட்ட பிரதானமான கட்சிகள் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவினை அறிவித்திருக்க மனோ கணேசன் தலைமையிலான அணி சஜித் பிரேமதாசவிற்கு ஆதரவு வழங்குகிறது. இதுவும் முழுமையான மலையக மக்களின் வாக்குகள் எப்பக்கம் செல்லும் என்பதைச் சந்தேகத்துக்கு உள்ளேயே வைத்திருக்கிறது. பிள்ளையானைப் பொறுத்தவரையில், கடந்த தேர்தல் வெற்றியானது அவருடைய தனிப்பட்ட ஆதரவுகளுக்கான வாக்குகளால் மாத்திரம் கிடைக்க பெற்றதல்ல என்பதை மறந்து விடுகிறார்கள். அதே போன்று வியாழேந்திரனைப் பொறுத்தவரையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் குறிப்பிட்டளவான ஒரு பட்டாளம் இணைந்து பெற்றுக் கொண்ட வாக்கில் ஒரு உறுப்பினர் பதவி கிடையாது என்பதே உண்மை. அதே நேரத்தில், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியைப் பொறுத்தவரையில், தமிழரசு கட்சி இல்லாத கூட்டணி அவர்களுக்குப் பெருமளவுக்கு ஆதரவிருக்கிறதா என்று சந்தேகிக்க வேண்டியே இருக்கிறது. முஸ்லிம் கட்சிகள் யார் வெற்றிபெறலாம் என்ற சந்தேகம் காரணமாக எல்லோர் பக்கத்திற்கும் தூண்டில் போடும் செயற்பாட்டினை செய்துகொண்டிருக்கிறார்கள். இவ்வாறான செயற்பாடு யார் வெற்றி பெற்றாலும் அவர்களுடன் தங்களது தரப்பினை இணைத்துக்கொள்ளும் தந்திரமாகும். அது எவ்வாறு வெற்றி பெறும் என்பது தெரியாத ஒன்று. கட்சிப் படிநிலைகளின் அங்கீகாரம் மக்களின் வாக்குகளுக்கு உத்தரவாதமாக அமைவதே வழக்கமாக இருந்தாலும் இம்முறை நடைபெறுகின்ற தேர்தலில் இது சிக்கலில் மாட்டி நிற்கிறது என்றே கூறவேண்டும். கட்சிகள் ஒரு தீர்மானத்தை எடுத்திருக்க அதன் உறுப்பினர்கள் பலர் வேறு தீர்மானத்துடன் செயற்படுகின்றமையானது துரதிர்ஷ்டவசமான நிலையையே தோற்றுவிக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. இந்த இடத்தில் எதிர்க்கட்சித் தலைவருக்கு இன மற்றும் மத சிறுபான்மை கட்சிகளிடமிருந்து கிடைத்துள்ள அங்கீகாரம் தேர்தல் வெற்றிக்கு உத்தரவாதமாக இருக்குமா என்பது 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை அடிப்படையாக வைத்தே பார்க்கப்படுகிறது. அன்றைய தேர்தலில் பிரயோகிக்கப்பட்ட இனவாதம் இம்முறை சிங்கள மக்களிடம் செல்வாக்கு செலுத்தினால் நிலைப்பாடு வேறு விதமாக இருக்கலாம். ஒரு தேசியவாத தளத்தில் பிரசாரம் செய்த கோட்டாபய ராஜபக்ஷ, பெரும்பான்மையின சிங்கள வாக்காளர்களிடம் இருந்து வலுவான ஆதரவைப் பெற்றார். எவ்வாறாயினும், இம்முறை மூன்று பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களும் தமது தேர்தல் பிரசாரங்களில் இன தேசியவாதத்தை நாடவில்லை. இது கடந்த காலங்களினைவிடவும் வரவேற்கத்தக்க இடைவெளியாகும், தேர்தல்கள் இனவாத தேசியவாத உணர்வை உருவாக்குவதாக இருந்தமையானது, கடந்த தேர்தல்களில் இனவாதத்தைத் தூண்டுவதாக இருந்து வந்திருக்கிறது. இது களையப்படும் தேர்தலாக இது இருப்பது சிறப்பானதே. ஜனாதிபதி வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் குறுகிய இன தேசியவாத பிரச்சினைகளுக்குள் திசைதிருப்பப்படாமல் நாட்டுக்கு ஆக்கப்பூர்வமான நிலைப்பாடுகளை எடுத்துரைத்துள்ளமை நல்லதே. எதிர்க்கட்சித் தலைவரின் விஞ்ஞாபனத்தில், "புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்படும் வரை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் உட்பட தற்போதைய அரசியலமைப்பை முழுமையாக அமுல்படுத்த அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருக்கும். மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைத் திரும்பப் பெறாமல், அதற்குப் பதிலாக மாகாண மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகளை வலுப்படுத்துவதன் மூலம் மாகாண சபைகளுக்கான அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தவும். பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை மாகாண சபைகளுக்குப் பகிர்ந்தளிப்பதாக முன்னர் கூறிய வாக்குறுதியை எதிர்க்கட்சித் தலைவர் பிரேமதாச மீளப் பெறவில்லை என்பதையே இது சுட்டிக்காட்டுகிறது. தனது அரசியல் போட்டியாளர்களை போலல்லாமல், அவர் அதைச் செயல்படுத்தப் போகிறார் என்பதில் திட்டவட்டமாக இருக்கிறார். 13ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும் என ஜனாதிபதி விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். மாகாணங்களிலிருந்து மத்திய அரசு திரும்பப் பெற்ற அதிகாரங்கள் மீண்டும் அவர்களுக்கு வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறாயினும், மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரங்களைத் தீர்மானிக்கும் பொறுப்பை புதிய பாராளுமன்றத்திடம் ஒப்படைப்பதில் அவர் எச்சரிக்கையுடன் செயற்பட்டு வருகின்றார். 2015 மற்றும் 2019க்கு இடையில் யஹ பாலன எனும் நல்லாட்சி அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட அரசியலமைப்பு வரைவுக் செயற்பாடுகள் துரிதப்படுத்தப்படும், அனைத்து மக்களும் ஆட்சியில் பங்கு கொள்ளும் வகையில் ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனம், மாவட்டம் மற்றும் மாகாணத்துடன் அரசியல் மற்றும் நிர்வாக அதிகாரங்கள் பகிரப்படும் எனவும் தெரிவித்துள்ளார். ஆனால், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவின் பிரச்சாரங்கள் சற்று இனவாதத்தினை மேம்படுத்துவதாக அமைந்திருப்பதாகக் குற்றச்சாட்டுக்கள் எழத் தொடங்கியிருக்கின்றன. இது தற்போதைய தேர்தலின் துரதிர்ஷ்டவசமான அம்சமாகக் கொள்ளப்பட வேண்டும். பொருளாதார நெருக்கடி மற்றும் 'ஆட்சி மாற்றம்' கோரிய அரகலய எதிர்ப்பு இயக்கத்தின் போது அவரது கட்சியின் ஆதரவு சற்று அதிகரித்திருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக மாற்றத்தை விரும்புபவர்கள் அவருக்கு வாக்களிக்க விரும்புகிறார்கள், ஏனெனில் அவர் நாட்டை நடத்தும் வணிக மற்றும் அரசியல் உயரடுக்கினருடன் குறைந்த தொடர்புகளைக் கொண்டுள்ளார். ஆனால் இது அவரது வெற்றியின் போது என்ன நடக்கும் என்ற அச்சத்தை உருவாக்குகிறது. ஜே.வி.பியில் தலைமைப் பதவிகளில் இருந்த பலரின் மார்க்சிய-லெனினிச முன்னோடிகளும், கடந்த கால வன்முறைகளின் நினைவுகளும் இந்தக் கவலைகளுக்குத் தீனி போடுவதாக காணப்படுகின்றன. பொருளாதார முன்னேற்றம், நாட்டின் நிலைபேறான தன்மை, கல்வி, தொழில் வாய்ப்புகள், வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் நீண்ட கால சுய நிர்ணயத்துக்கான கோரிக்கைகள், ஊழலற்ற நாடு, வளங்களை தவறாக பகிர்ந்தளிப்பது தூய அரசியல் கலாசாரம் என பலவேறு விடயங்களுக்குள் சிக்குண்டிருக்கும் புதிய ஜனாதிபதிக்கான தெரிவு சற்று ஊகிக்க முடியாத ஒன்றே. இவ்வாறான நிலையில் புதிய ஜனாதிபதியின் வரவுடன் எவ்வாறு புத்துயிர் பெறும் என்பதனையும் சிந்தித்துக் கொள்வோம்.

## கடிதங்கள்

### சட்டவிரோத மணல் அகழ்வை தடுத்து நிறுத்தவும்



கிளிநொச்சி-கண்டாவளை பிரதேசத்திற்குட்பட்ட பெரியகுளம், கனகராயனாற்றுப் பகுதியில் பல ஏக்கர் காணிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதேச வாசிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கனகராயன் ஆற்றினை அண்டிய பெரிய குளம் பகுதியிலும் தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சுமார் 25 அடி ஆழத்துக்கும் மேலாக அதிக அளவில் கனரக வாகனங்கள் மூலம் மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தொடர்ந்து இடம்பெற்றுவரும் இந்த சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பாக பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட அரச அதிபர் ஆகியோரால் பொலிஸாருக்கு தகவல் வழங்கிய போதும், இந்த சட்டவிரோதமான மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவதற்கு எந்த விதமான நடவடிக்கைகளையும் எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

- யது பாஸ்கரன்




1,500 IT புலமைப்பரிசில்களை வழங்கியது

# ESOFT Metro Campus

தொழில்நுட்பத் துறையில் இலங்கையின் அடுத்த தலைமுறை திறமைகளை ஊக்குவிப்பதில் பங்களிப்பு வழங்கும் வகையில், இலங்கையின் முன்னணி தனியார் உயர் கல்வி வலையமைப்பான ESOFT Metro Campus, இலங்கையின் சகல பாகங்களையும் சேர்ந்த 1,500 க்கும் அதிகமான மாணவர்களை தெரிவு செய்து, தகவல் தொழில்நுட்பத்தில் ஐக்கிய இராஜ்ஜிய நிலை 3 டிப்ளோமாவை தொடர்வதற்கு புலமைப்பரிசிலை வழங்க முன்வந்திருந்தது.

அண்மையில் இடம்பெற்ற அறிமுக நிகழ்வின் அங்கமாக, கல்வி அமைச்சர் கலாநிதி. சுசில் பிரேமஜயந்தவிடமிருந்து 40 மாணவர்கள் தமக்குரிய புலமைப்பரிசிலை பெற்றுக்கொண்டனர். இந்நிகழ்வு ஆகஸ்ட் 30ஆம் திகதி BMICHஇல் நடைபெற்றது.

ESOFT Metro Campus இன் தவிசாளரும் குழும முகாமைத்துவ பணிப்பாளருமான கலாநிதி. தயான் ராஜபக்ஷவுடன் சிரேஷ்ட முகாமைத்துவத்தை சேர்ந்தவர்கள் மற்றும் கல்விமான்கள்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நாடளாவிய ரீதியில் காணப்படும் ESOFT இன் 40 கிளைகள் மற்றும் பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட்ட போட்டிகரமான பரீட்சைகளினூடாக தரம் 10 மற்றும் 11ஐச் சேர்ந்த மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். பூர்த்தி செய்ததன் பின்னர், மாணவர்கள் நிலை 4 மற்றும் 5 உயர் தேசிய டிப்ளோமாக்களுக்கு போட்டியிட முடியும் என்பதுடன், பிரிட்டிஷ் பட்டத்தை பூர்த்தி செய்ய முடியும். இவை அனைத்தையும் 20 வயதுக்குட்பட்ட காலப்பகுதியில் மேற்கொள்ள முடியும். அதனூடாக உயர் தகைமைசார்ந்தவர்களை உருவாக்கிக் கொள்ள முடிவதுடன், கூட்டாண்மை உலகில் உயர்ந்த ஸ்தானத்துக்கு செல்லலாம் அல்லது தமது தொழில்முயற்சிகளை மேற்கொள்ள முடியும்.

அடுத்த தலைமுறை தகவல் தொழில்நுட்ப நிபுணர்களை ஊக்குவிக்கும் வகையில் இந்தத் திட்டம் அமைந்திருப்பதுடன், மாணவர்களுக்கு தமது வழமையான பாடசாலை பாடவிதானத்துடன் உயர் கல்வியை தொடரும் வாய்ப்பு வழங்கப்படுகின்றது. எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்வதற்கு அவசியமான மாணவர் தலைமுறையினரை உருவாக்கும் இலங்கை அரசாங்கத்தின் நோக்கத்துடன் பொருந்தும் வகையில் இது அமைந்துள்ளது.

முன்னைய சுற்றை தவறவிட்ட மாணவர்கள் செப்டெம்பர் 30ஆம் திகதி வரை எந்தவொரு ESOFT கிளைக்கும் விஜயம் செய்து கணனி அடிப்படையிலான தெரிவு பரீட்சைக்கு தோற்றி முழு அல்லது அரை புலமைப்பரிசிலை பெற்றுக் கொள்ளுமாறு ESOFT அழைப்புவிடுத்துள்ளது. தேசிய, மாகாண அல்லது சர்வதேச பாடசாலைகளைச் சேர்ந்த தரம் 10 இல் பயிலும் மாணவர்கள் இந்த புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்க தகைமை பெற முடியும்.

SiyamResorts பாசிக்குடா, Iru Fushi ஆகியவற்றுக்கு

# பசன் விஜேவர்தன நியமனம்

Sun Siyam ரிசோர்ட்ஸ், தனது Sun Siyam Pasikudah மற்றும் Sun Siyam Iru Fushi ஆகியவற்றின் விற்பனைகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு பணிப்பாளராக பசன் விஜேவர்தனவை நியமித்துள்ளதாக அறிவித்துள்ளது. 2024 ஆகஸ்ட் 17ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

விருந்தோம்பல் துறையில் ஒரு தசாப்த காலப்பகுதிக்கு மேலான அனுபவத்தை பசன் கொண்டுள்ளதுடன், இலங்கை, மாலைதீவுகள் மற்றும் ஓமான் ஆகிய நாடுகளில் சொகுசு, வாழ்க்கைமுறை மற்றும் முழு சேவை ஹோட்டல்களில் தலைமைத்துவ நிலைகளில் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டுள்ளார். அண்மையில் இவர் Shangri-La Muscat இல் விற்பனைகள் மற்றும் வணிக அபிவிருத்திக்கான பணிப்பாளராக செயலாற்றியிருந்தார். அதன் போது, வியாபார வளர்ச்சி மற்றும் மூலோபாய விருத்தி ஆகியவற்றில் இவர் முக்கிய பங்காற்றியிருந்தார். இந்த நிலையை வகிக்கும் முன், Shangri-La, Sri Lankaஇில் விற்பனை பிரிவின் பணிப்பாளராக செயலாற்றியிருந்தார். இவர் தமது தொழில் வாழ்க்கையை இலங்கை Cinnamon Hotels &Resorts இல் ஆரம்பித்ததுடன், Cinnamon city hotels ஐ போட்டிகரமான சந்தை நிலைக்கு கொண்டு வருவதில் முக்கிய பங்களிப்பை வழங்கியிருந்தார்.

Sun Siyam ரிசோர்ட்ஸில் பசன் வகிக்கும் முதல் நிலையாக இது அமைந்திராமல், முன்னர் மாலைதீவுகள் Sun Siyam Iru Veli இல் விற்பனைகள் மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளராக செயலாற்றியிருந்தார். ரிசோர்ட்டின் வளர்ச்சி மற்றும் சந்தை பிரசன்னம் ஆகியவற்றை மேம்படுத்துவதில் இவர் முக்கிய பங்காற்றியிருந்தார். Sun Siyam ரிசோர்ட்ஸுக்கு இவரின் மீள்வருகை என்பது, வர்த்தக நாமத்துடனான அவரின் நிபுணத்துவம் மற்றும் உறுதியான உறவுகள் போன்றவற்றுக்கான எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

இவரின் புதிய நிலையில், Sun Siyam Iru Fushi மற்றும் Sun Siyam பாசிக்குடா ஆகியவற்றின் வருமான வளர்ச்சியை கட்டியெழுப்புவது, வர்த்தக நாம தோற்றப்பாட்டை மேம்படுத்துவது மற்றும் சந்தை பிரசன்னத்தை சீராக்குவது போன்றவற்றில் அதிகளவு கவனம் செலுத்துவார். விற்பனைகள் மற்றும் சந்தைப்படுத்தல் அணிக்கு இவர் தலைமை வகிப்பதுடன், பிரதான பங்காளர்களுடன் உறுதியான பங்காண்மைகளை கட்டியெழுப்புவது மற்றும் தொடர்ந்தும் சிறந்த விருந்தினர் அனுபவங்களை ஏற்படுத்துவது போன்றவற்றை உறுதி செய்வார்.

குழுமத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைகள் பணிப்பாளர் அஹமட் நவுபல் கருத்துத் தெரிவிக்கையில், “Sun Siyam குடும்பத்துக்கு பசனை மீண்டும் வரவேற்பதில் நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். விருந்தோம்பல் துறையில் இவரின் பரந்த அனுபவம் மற்றும் தலைமைத்துவம் ஆகியன எமது அணியினருக்கு சிறந்த சொத்தாக அமைந்திருக்கும். இவரின் வழிகாட்டலில், Sun Siyam Iru Fushi மற்றும் Sun Siyam பாசிக்குடா ஆகியன தொடர்ந்தும் சிறந்த அனுபவங்களை எமது விருந்தினர்களுக்கு வழங்கும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்” என்றார்.



# ‘திங்களச்ச நிச்சயம்’

சு.திலேஜா,
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.




‘திங்களச்ச நிச்சயம்’ என்னும் மலையாளபடத்தின் பொருள் ‘திங்கட்கிழமை நிச்சயதார்த்தம்’ என்பதாகும். இத்திரைப்படம் சிறந்த மலையாள மொழி மொழி திரைப்படம் என்ற தேசிய விருது பெற்ற திரைப்படமாகும். சிறந்த கதை, சிறந்த இரண்டாவது படம் என்ற கேரள மாநில திரைப்பட விருதுகளையும் வென்றுள்ளது. இத்திரைப்படமானது 2022ஆம் ஆண்டில் வெளிவந்த திரைப்படமாகும். தற்போது தேசிய விருது சிறந்த மலையாள திரைப்படத்தில் தேர்வாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்திரைப்படத்தின் கதாபாத்திரங்களை பற்றி பார்க்கும் போது, தந்தையாக மனோஜ்கே. ஜூஎன்பவர் விஜயன் என்ற பெயரிலும் தாயாக அயிஷா என்பவர் லலிதா என்ற பெயரிலும் சுரபி, சுஜா, சுஜித் ஆகியோர் பிள்ளைகளாகவும் நடித்துள்ளனர். இந்த திரைப்படத்தில் விஜயனுடைய போராட்டம் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. முக்கிய கதாபாத்திரங்களை எளிமையாகவும் நகைச்சுவையாகவும் வெளிப்படுத்தி இருப்பதை காணலாம்.

சொன்னாஹெட்டே இயக்கத்தில் நேரடியாக சோனி ஒடிசியில் வெளியாகிய இத்திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. புஷ்கர்பீல்ம்ஸ் தயாரிப்பில் சொன்னாஹெக்டே இயக்கத்தில் மனோஜ்கே. ஜூ, அயிஷா, பிரபாகரன், அனகா, நாராயணர், அர்ஜுன், அசோகன் உள்ளிட்ட பலர் நடிப்பில் வெளியாகியது.

‘திங்களச்ச நிச்சயம்’ படத்தின் 90 சதவீதமான காட்சிகள் ஒரு சிறிய வீட்டிலும் அதனை சுத்தியுமேஎடுக்கப்பட்டுள்ளன. இரண்டு, மூன்று இடங்கள் மட்டுமே வேறு இடத்தில் எடுக்கப்பட்ட காட்சிகளாக காணப்படுகின்றன. அதுவும் சில நிமிடகாட்சிகளாக காணப்படும்.

ஆனால், பார்ப்பவர்களுக்கு ஒரு நொடி கூட சலிப்பு இன்றி பார்க்கக்கூடிய வகையில் நேர்த்தியாகத் திரைக்கதையை இயக்குநர் செதுக்கியுள்ளார்.

வீட்டுக்கு வரும் ஒவ்வொரு விருந்தினரின் கதாபாத்திரங்களும் அவர்கள் பேசும் வசனங்களும் சூழலியல் நகைச்சுவைக்கான சிறந்த கதைக்களமாகக் காணப்படுகிறது.

திரைப்படத்தின் கதை பற்றிப் பார்க்கும் போது, சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த விஜயனுக்கு இரண்டு மகள்களும் ஒரு மகனும் காணப்படுகின்றனர். மூத்த பெண் பிள்ளை அப்பாவின் பேச்சை மீறி காதல் திருமணம் செய்து விடுகிறாள். இரண்டாவது மகள் தன் விருப்பப்படி தான் திருமணம் செய்து கொள்வாள் என நம்பும் விஜயன் அவளுக்கு மாப்பிள்ளை பார்த்து



திங்கட்கிழமை நிச்சயம் செய்யமுடிவு செய்கிறார்.

ஆனால், இரண்டாவது மகளும் ஒருவரைக் காதலிக்கிறார். இன்னொரு பக்கம் மகனின் காதலியும் விஜயனின் வீட்டுக்கு வர இறுதியில் என்ன நடக்கிறது என்பதுதான்

இத்திரைப்படத்தின் கதையும் கிளைமாக்ஸ் ஆகும். இத்திரைப்படத்தின் ஊடாக கேரளாவின் நடுத்தர குடும்பங்களின் நிச்சயம் எப்படி நடக்கும் என்பதை இத்திரைப்படத்தின் மூலம் எடுத்துக்காட்டப்படுகிறது.

திரைப்பட எழுதுனர் சிறிராஜ், ரவீந்திரன் ஒளிப்பதிவு காட்சிகள் அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் ஒளிப்பதிவு கிராமத்து சூழ்நிலைகளையும் அதன் இயல்பான அழகுகளையும் சுவாரசியமாகப் படம் பிடித்துள்ளார்.

‘திங்களச்ச நிச்சயம்’ என்ற இந்த மலையாள திரைப்படத்தின் பின்னணி இசை பற்றிப் பார்க்கும் போது, நகைச்சுவைக்குப் பின்னணி இசை முக்கியமானது. யதார்த்தத்தை செய்முறைக்காமல் முஜீப்மஸ்ஜித்தின் பின்னணி இசையும் பாடல்களும் பார்வையாளரை ரசிக்க வைத்துள்ளது.

திரைப்படத்தின் shot களைப் பற்றி நோக்கும்போது பெரும்பாலும் long shot இல்லாத இப்படத்தில் ஒரு வீட்டின் அறைகளை உட்பட எடுத்து படம் முழுவதையும் ரசிகர்களை உணர வைத்துள்ளார். அழகை மிகைப்படுத்திக் காட்டாமல் யதார்த்தத்தை long shot மூலம் காண்பிக்கப்படுகிறது.

ஆகவே, ‘திங்களச்ச நிச்சியம்’ என்னும் திரைப்படம் மனதுக்கு நிறைவளிக்கும் குடும்ப நகைச்சுவை கொண்ட திரைப்படமாகக் காணப்படுகின்றது. எளிமையான கதை நகைச்சுவை தருணங்கள் மற்றும் காதல், குடும்ப உறவுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய இந்த திரைப்படம் பார்வையாளர்களைச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கின்றது.



ச.சேகர்



# சிறந்த பொருளாதாரக் கொள்கை யாருடையது?

**இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியை தெரிவு செய்யும் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற இன்னமும் இரண்டு வாரங்களுக்கு குறைவான நாட்கள் எஞ்சியிருக்கும் நிலையில், தேர்தலில் போட்டியிடும் முக்கிய போட்டியாளர்கள் கடந்த வாரம் தமது பொருளாதாரக் கொள்கைகளை வெளியிட்டிருந்தனர். இதுவரை காலமும் நடைபெற்ற தேர்தல்களில் பொருளாதாரக் கொள்கை என்பது காகிதங்கள் சிலவற்றுக்குள் அடங்கியிருக்கும் பொருளாக மாத்திரமே அமைந்திருந்ததுடன், வாக்காளர்கள் மத்தியில் அவை தொடர்பில் பெரிதும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. ஆனாலும், இம்முறை, நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து, எதிர்வரும் காலங்களில் இன்னும் சவால்களுக்கு முகங்கொடுக்கவுள்ள நிலையில், முக்கியமான காலகட்டத்தில் நடைபெறும் இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவோர் வெளியிடும் பொருளாதாரக் கொள்கை என்பது தொடர்பில் பலரும் முக்கிய கவனம் செலுத்தியிருந்தனர். குறிப்பாக, பொருளாதார மீட்சியை நோக்கிய பயணத்தில், சர்வதேச நாணய நிதியத்துடன் தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசு உடன்படிக்கையை ஏற்படுத்தி, அந்த வழிகாட்டல்களின் பிரகாரம் செயற்படும் நிலையில், அந்த உடன்படிக்கைகளின் நிபந்தனைகளின் அடிப்படையில் நாட்டு மக்களுக்கு பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது.**

இதனால் தேர்தலில் போட்டியிடும் முக்கிய அபேட்சகர்கள், தாம் பதவிக்கு வந்தவுடன் இந்த உடன்படிக்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவது உள்ளடங்கலாக பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய கருப்பொருளாக இந்த பொருளாதாரக் கொள்கையை முன்வைத்துள்ளனர். இவ்வாறு தற்போதைய ஜனாதிபதியும், சுயேச்சை வேட்பாளருமான ரணில் விக்ரமசிங்க, ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச மற்றும் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்க ஆகியோரின் தேர்தல் விஞ்ஞாபனம் அல்லது பொருளாதாரக் கொள்கையை ஆராய்வதற்கு வாய்ப்புக் கிட்டியிருந்தது.

இந்த பத்தி உண்மையில் பொது மக்களுக்கு, நாட்டின் வாக்காளர்களுக்குப் பொருளாதாரக் கொள்கை பற்றிய தெளிவுபடுத்தலையும், எந்தக் கொள்கையில் எவ்வாறான அம்சங்கள் அடங்கியுள்ளன என்பதைப் பற்றிய தகவல்களைத் தெளிவுபடுத்தும் வகையில் அமைந்துள்ளது. மாறாக, எந்தவொரு அரசியல் கட்சிக்கும் பக்கச்சார்பானதாக அமைந்திருக்கவில்லை என்பதைத் தெளிவுபடுத்திக் கொண்டு தொடர விரும்புகின்றேன். பொது மக்களுக்கும் தேர்தலில் போட்டியிடுவோருக்கும் இடையில் கைச்சாத்திடப்படாத ஒரு உடன்படிக்கையாக இந்தக் கொள்கை அமைந்துள்ள போதிலும், இதுவரை காலமும் அந்தக் கொள்கை அவ்வாறு பார்க்கப்படவில்லை. பெருமளவு செலவு செய்யப்பட்டு, இந்த கொள்கை அச்சிடப்பட்டு, அதனை வெளியிடுவதற்குப் பல தரப்பினரும் அழைக்கப்பட்டு வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டு பிரம்மாண்டமாக வெளியிடப்பட்டு வந்த போதிலும், அதிலுள்ள விடயங்கள் தொடர்பில் அந்தந்த கட்சிகளின் தலைவர்கள் எந்தளவுக்கு விடயங்களை அறிந்து வைத்துள்ளனர் என்பது கேள்விக்குறியே. ஏனெனில், இந்தக் கொள்கைகளைத் தயாரிப்பது, அந்தந்த துறைசார் நிபுணர்கள் குழுவினாலாகும் இந்த நிலை மாற வேண்டும். இவ்வாறு எழுத்து மூலம் வெளியிடப்படும் இந்த கொள்கைப் பிரகடனத்தை ஆதாரமாகக் கொண்டு, அரசியல் தலைவர்களை பொறுப்புக்கூரச் செய்யும் நிலைக்குத் தள்ளும் நிலைக்கு நாடு உயர வேண்டும். மேலேத்தேய நாடுகளில் இவ்வாறான ஒரு கலாசாரமே நடைமுறையிலுள்ளது.

தேர்தல் மேடைகளில் ஒரு கட்சியினர் மற்றைய கட்சியினரைத் தாக்கி, ஏளனப்படுத்தி மக்களைக் கவரும் வகையில் கருத்துகளை வெளியிடுவதும், அதற்குப் பதிலளிப்பது போன்று இதர தரப்பினர் தமது மேடைகளில் கருத்துகளை வெளியிட்டு மக்களின் கரகோஷங்களைப் பெறுவதும், நாட்டின் எதிர்காலத்துக்குப் பயனுள்ளதாக அமையாது. மாறாக, தாம் என்ன செய்யப் போகின்றோம், எவ்வாறு செய்யப்போகின்றோம் என்பதைத் தெளிவுபடுத்துவதே பிரதானமானதாகும். நாட்டுக்கும், மக்களுக்கும் அவையே பயனுள்ளதாக அமைந்திருக்கும். அதனை உறுதி செய்யும் ஆதாரமாக இந்தக்கொள்கை அமைந்துள்ளது. போட்டியாளர்களின் ஏனைய கொள்கைகள் அரசியல் ரீதியில் மாறுபட்ட அம்சங்களைக் கொண்டதாக அமைந்திருந்தாலும், பொருளாதாரக் கொள்கை என்பது பெருமளவில் இலக்கங்கள் மற்றும் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டமைவதால், அவை தெளிவானதாக அமைந்திருக்க வேண்டும்.

பொதுவான கருத்தின் பிரகாரம் ஐக்கிய மக்கள் கூட்டணியின் வசம் பொருளாதாரம் தொடர்பில் அறிவார்ந்த அங்கத்தவர்கள் காணப்படுகின்றனர் எனும் கருத்து நிலவி வந்த நிலையில், அந்தக் கட்சியின் பொருளாதாரக் கொள்கை கடந்த வாரம் வெளியிடப்பட்டிருந்தது. இந்த கொள்கை தொடர்பில் பொருளாதார வல்லுநர்கள் மத்தியில் பெருமளவு எதிர்பார்ப்பும் காணப்பட்டது. இந்தக் கொள்கையில் விஞ்ஞாபனம் சாத்தியப்படுமா என்பதை உறுதி செய்யும் செயற்திட்டம் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு அவசியமான கருப்பொருட்களை இந்த அணியின் கொள்கை கொண்டுள்ளது.

குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவது மிகவும் முக்கியமானதாக அமைந்துள்ளது. தற்போதைய ஜனாதிபதி இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளமையினால், அது தொடர்பில் பெருமளவில் அவரின் கொள்கையில் விளக்கமளிக்கப்படாமல் இருந்திருக்கலாம் எனும் அனுமானத்துடன், புதிதாக ஆட்சியேறவுள்ள இதர இரு தேர்தல் அபேட்சகர்களின் பொருளாதாரக் கொள்கைகளை ஒப்பீட்டளவில் எடுத்துக் கொண்டால், தேசிய மக்கள் சக்தியின் கொள்கையில் புதிய கடன் நிலைபேறாண்மை மதிப்பாய்வு (DSA) அவசியம் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் அடிப்படையான அம்சம் இந்த கடன் நிலைபேறாண்மை மதிப்பாய்வு (DSA) ஆகும். அவ்வாறு அதில் மாற்றத்தை ஏற்படுத்துவது என்பது, தற்போது ஏற்படுத்தியுள்ள ஒப்பந்தத்தை இரத்து செய்து, புதிய ஒப்பந்தத்தை மேற்கொள்வதாகும். கடந்த ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்வதற்கு சுமார் ஒரு வருட காலம் வரை தேவைப்பட்டதை நாம் அறிவோம். எவ்வாறாயினும், புதிய ஒப்பந்தமொன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கும் அது போன்ற காலப்பகுதி தேவைப்படும்பட்சத்தில், நாட்டுக்கு அவசியமான அந்நியச் செலாவணி வரத்தை இந்த ஒரு வருட காலப்பகுதியினுள் எவ்வாறு உறுதி செய்வது என்பது தொடர்பான விளக்கங்கள் தேசிய மக்கள் சக்தியின் கொள்கையில் இல்லை. இது மிகவும் சிக்கலான செயலாகவே பார்க்கப்படுகின்றது.

வெளிநாடுகளில் வதியும் தமது ஆதரவாளர்களின் உதவியைக் கொண்டு, சுமார் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை ஒரு வருட காலப்பகுதியில் திரட்டிக் கொள்வது என்பது நடைமுறைச் சாத்தியமற்ற விடயமாகும். பிணையம் ஒன்றை உருவாக்கி அவற்றில் முதலிடச் செய்வது எனும் கொள்கையைப் பின்பற்றினாலும், அது தொடர்பான தெளிவுபடுத்தல்கள் எதுவும் அவர்களின் கொள்கையில் இல்லை. எனவே, இந்தக் கொள்கை அரசியல் ரீதியில் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கும் அனுரகுமார திசாநாயக்கவின் பின்னாலுள்ள மக்களுக்கு ஒருவித ஏமாற்றத்தை வழங்குவதாகவே அமைந்துள்ளது. உயர்ந்த மட்ட, தெளிவற்ற பொருளாதாரக் கொள்கை ஒன்றே அவர்கள் வசம் உள்ளது.

மாறாக, ஐக்கிய மக்கள் கூட்டணியின் கொள்கையில், இந்த கடன் நிலைபேறாண்மை மதிப்பாய்வு (DSA) என்பதில் மாற்றத்தை ஏற்படுத்தாமல், நீடித்த நிதி வசதி உடன்படிக்கையில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனூடாக, உயர் தொழில்நுட்ப, உயர் திறனை அடிப்படையாகக் கொண்டு, ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்வதற்கான வழிமுறைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்காக தற்போது காணப்படும் சர்வதேச நாணய நிதியத்தின் நீடித்த நிதி வசதி உடன்படிக்கையில் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளது. அதனை மேற்கொள்வது பற்றியே ஐக்கிய மக்கள் கூட்டணியின் பொருளாதாரக் கொள்கையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. நாட்டில் மூலதனம் இன்மை, போதியளவு புத்திஜீவிகள் இன்மை போன்ற சூழலில், நாட்டின் பொருளாதார வளர்ச்சியானது புறக் காரணிகளில் தங்கியிருக்க வேண்டும். அதனை அடிப்படையாகக் கொண்டதாக ஐக்கிய மக்கள் கூட்டணியின் கொள்கை அமைந்துள்ளது. மேலும், சிங்கப்பூரில் காணப்படுவதைப் போன்று, அரசாங்கத்தின் பொறுப்பிலுள்ள நிறுவனங்களை நிர்வகிப்பதற்கு தாய் நிறுவனம் ஒன்றை ஸ்தாபித்து, அரச நிறுவனங்களை அதன் கீழ் கொண்டு வந்து, அரசின் தலையீடின்றி அவற்றை நிர்வகிக்கும் பொறுப்பை பேணுவது போன்ற ஒரு முறைமையைப் பற்றியும் தெளிவுபடுத்தியுள்ளது.


தற்போதைய ஜனாதிபதியின் பொருளாதாரக் கொள்கையை எடுத்துக் கொண்டால் அதில் தெளிவான இலக்குகள் என எதுவும் உள்ளடக்கப்படவில்லை. கடந்த பதினைந்து, இருபது வருட காலப்பகுதியில் வெளியிடப்பட்டிருந்த தேர்தல் விஞ்ஞாபனங்களில் அடங்கியிருந்த அம்சங்களைத் திரட்டி அதனை உள்ளடக்கியதாகவே ஜனாதிபதியின் கொள்கை அமைந்திருந்தது. நாட்டை கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் மீட்டு இந்த நிலைக்குக் கொண்டு வந்துள்ளமையால் தம்மைத் தெரிவு செய்யுமாறு வாக்காளர்களிடம் வேண்டி ஜனாதிபதியினால் எழுதிய கடிதம் மாத்திரமே இதில் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

இவ்வாறு ஐக்கிய மக்கள் கூட்டணியின் பொருளாதாரக் கொள்கை பல நடைமுறைச் சாத்தியமான, செயற்திட்டங்கள் பலதைக் கொண்டுள்ளமை உண்மையில், இதுவரையில் கண்டுற்ற பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் தூர நோக்குடைய ஒரே திட்டமாக அமைந்துள்ளது. குறிப்பாக முக்கிய மூன்று போட்டியாளர்களைச் சார்ந்த கொள்கைகளில் இது முதன்மை பெற்றுள்ளது என்பது எமது கருத்து.

உண்மையில் இதுபோன்ற கொள்கை தேர்தல் நடைபெறுவதற்கு ஆகக்குறைந்தது இரண்டு மாதங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்டிருந்தால், அது தொடர்பில் ஆராய்ந்து, பல தரப்பினரின் கருத்துகளைப் பெற்று, அந்த கொள்கையை மேம்படுத்திக் கொள்வதற்குக்கூட கட்சிகளுக்கு சந்தர்ப்பம் காணப்பட்டிருக்கும். ஆனாலும் இந்த விஞ்ஞாபனங்கள் தேர்தலுக்கான திகதி அருகில் தெரியும் சுமார் இரண்டு வாரங்கள் வரையுள்ள நிலையில் வெளியிடப்பட்டுள்ளமையானது, அனைத்து தரப்பினராலும் இவற்றை முழுமையாக வாசித்து, அதிலுள்ள அம்சங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ள முடியுமா எனும் கேள்வியும் இல்லாமல் இல்லை.

இருந்தாலும், எமது வாசகர்களுக்கு எம்மாலான தெளிவுபடுத்தலைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இந்த பத்தி அமைந்திருக்கும் என நாம் கருதுகின்றோம். இன்னும் ஐந்து வருட காலப்பகுதிக்கு நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் தேர்தலாக இந்த ஜனாதிபதித் தேர்தல் அமைந்திருக்கும். மீண்டும் எமக்கு நெருக்கடிகளுக்குள் சென்றுவிட முடியாது. தமக்கு விருப்பமான போட்டியாளருக்கு வாக்களிக்கும் உரிமை சகலருக்கும் உண்டு, வழமை போலல்லாது, இம்முறை யாருக்கு வாக்களிப்பது என்பதை இன்னமும் தீர்மானிக்க முடியாமல் மதில் மேல் பூனை போன்ற நிலையிலிருக்கும் வாக்காளர்கள் எவரேனும் இந்த பத்தியை வாசித்துவிட்டுச் சாமர்த்தியமான தீர்மானத்தை மேற்கொள்வார்களாயின், நாட்டுக்கு அது வெற்றியாக அமையும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

இவ்வாறான கொள்கைகள் வெளிப்படுத்துவதுடன் நின்றுவிடாமல், அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை அரசியல் ரீதியான தலையீடுகள் இன்றி செயற்படுத்துவது என்பது மிகவும் முக்கியமானதாகும். குறிப்பாக இந்த மூன்று கொள்கைகளிலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய கொள்கையைக் கொண்டுள்ள ஐக்கிய மக்கள் கூட்டணியின் கொள்கை, அந்த கட்சியின் வேட்பாளர் சஜித் பிரேமதாச ஆட்சி பீடம் ஏறினால், அவர்கள் இந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்கு அழுத்தம் பிரயோகிக்கப்பட வேண்டும்.







Launching the blue print for economic recovery at the SJB economic summit

# விழிப்புணர்வு பதிவு



பெரியசாமிப்பிள்ளை
செல்வராஜ்
முன்னாள் ராஜதந்திரி

அப்போது எனக்கு சுமார் பதினாறு வயது இருக்கும். பாடசாலை மாணவனாக இருந்த காலகட்டத்தில் எனது பாடசாலை ஆசிரியராக, வழிகாட்டியாக, குடும்ப நண்பராக இருந்தவர் அமரர் முத்துவேல் சிவராம்.

அவரின் வழிகாட்டலின் பேரில், மொக்காத் தோட்டத்தில் அக்காலத்தில் வாழ்ந்த முதியோர்களுக்கான (சுமார் 55 வயதுக்கு மேற்பட்டவர்கள்) எழுத்தறிவினை உயர்த்துவதற்காக மாலை நேர வகுப்புகளை இலவசமாக நடத்தியமை இன்றும் எனது ஞாபகத்துக்கு வருகின்றது.

பஸ் போக்குவரத்து இல்லாத அக்காலத்தில், இரண்டு தோட்டங்களுக்கூடாக, கொட்டும் மழையில் ஒரு பழைய குடையைப் பிடித்துக் கொண்டு, மொக்காத் தோட்டத்திற்கு நடந்து சென்று கற்பித்த நினைவுகள் என்றும் பசுமையானவை.



எனக்கு தேவையான சகல ஒத்துழைப்புகளையும் வழங்கிய துரைராஜா என்பவரையும் இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்கின்றேன்.

துரைராஜா அவர்கள் பின்னாளில் தமிழகத்துக்கு குடி பெயர்ந்தாரென நினைக்கின்றேன். எழுத்தறிவிற்கு இன, வயது, பால் என வேறுபாடு கிடையாது.

எந்த வயதிலும் கற்க முடியும். சர்வதேச எழுத்தறிவு தினமாகும் (செப்டெம்பர் 08).

உலகில் பிறந்த ஒவ்வொரு பிரஜையும் ஏதாவது ஒரு மொழியில் , எழுதவோ வாசிக்கவோ , செவிமடுக்கவோ தெரிந்திருத்தல் அவசியம். ஒரு சராசரி மனிதனது வாழ்க்கையில் எழுத்தறிவின் பங்களிப்பு இன்றியமையாததாகக் காணப்படுகின்றது.

எழுத்தறிவின் பெருமையை உணர்ந்த அவ்வையார் "எண்ணும் எழுத்தும் கண்ணென தகும்' என்றார்.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு", இது திருவள்ளுவர் தந்த விளக்கம்

சங்க காலம் தொட்டு இன்று வரை எழுத்தறிவின் முக்கியத்துவத்தினை பல்வேறுபட்ட நபர்களும், நிறுவனங்களும் வலியுறுத்தி வந்துள்ளதனை எம்மால் அவதானிக்க முடியும்.

எழுத்தறிவின்மை தொடர்பான ஒரு விழிப்புணர்வு தினமாக, உலகம் முழுவதும் இந்த தினம் இன்றைய நாளில் கொண்டாடப்படுகின்றது.

கல்வி , சுகாதாரம் மற்றும் இன்னோரன்ன அம்சங்களில் எழுத்தறிவு எந்தளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது என்பதனை தெளிவுபடுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் யுனெஸ்கோ நிறுவனம் இந்த தினத்தை ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் மாதம் எட்டாம் திகதி கொண்டாடி வருகின்றது.

1965ஆம் ஆண்டு, செப்டெம்பர் மாதம் எட்டாம் திகதி ஈரான் நாட்டின் தலைநகரான தெஹரான் நகரில் சர்வதேச கல்வி அமைச்சர்கள் மாநாடு நடைபெற்றது.

இந்த மகாநாட்டில் எழுத்தறிவற்றவர்கள் இல்லாத உலகை ஏற்படுத்தவும், எழுத்தறிவு பெற்றவர்களின் எண்ணிக்கையை உயர்த்தும் நோக்கில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதன்படி, ஒவ்வொரு ஆண்டும் செப்டெம்பர் மாதம் 8ஆம் திகதி சர்வதேச உலக எழுத்தறிவு தினமாக யுனெஸ்கோ நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டு கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

"பன்மொழிக் கல்வியை ஊக்குவித்தல், பரஸ்பர புரிதல் மற்றும் அமைதிக்கான எழுத்தறிவு" என்பதே இந்த வருடத்திற்கான கருப்பொருளாகும்.

பரஸ்பர புரிதல், சமூக ரீதியிலான ஒற்றுமை மற்றும் அமைதியை வளர்ப்பதற்குப் பன்மொழிக் கல்வி முக்கியத்துவமானது என்பதனை வலியுறுத்துவதாக இது அமைகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDGs) மற்றும் அதன் 2030ஆம் ஆண்டின் நிலையான வளர்ச்சிக்கான நிகழ்ச்சி நிரலின் முக்கிய அங்கமாக எழுத்தறிவு சார்ந்த அம்சங்கள் காணப்படுகின்றது.

உலகத் தலைவர்களால் 2015ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட SDGகள், அதன் நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாக, தரமான கல்விக்கான உலகளாவிய அணுகல் மற்றும் மக்களின் வாழ்நாள் முழுவதும் கற்றல் வாய்ப்புகளை ஊக்குவிக்கின்றது.

யுனெஸ்கோ நிறுவனத்தின் படி, உலகில் ஆகக் குறைந்த அடிப்படை எழுத்தறிவுத் திறமை அற்றவர்களாக சுமார் 763 மில்லியன் மக்கள் காணப்படுகின்றனர் . யுனெஸ்கோ அறிக்கையின் படி , 2022 ஆம் ஆண்டில் , ஏழு பேரில் ஒருவர் கல்வி அறிவற்றவராகவும், சுமார் 250 மில்லியன் சிறார்கள் பாடசாலைக்குச் செல்லாதவர்களாகவும் உள்ளனரெனக் குறிப்பிடுகின்றது.

சுமார் 75 மில்லியன் சிறுவர்கள் பாடசாலை இடை விலகலாகவோ அல்லது தொடர்ச்சியாகப் பாடசாலைகளுக்கு வருபவர்களாகவோ காணப்படுவதில்லை எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சமத்துவமான பொருளாதார வாய்ப்புகள் இல்லாமை மற்றும் வறுமை, மனித உரிமைகள் நசுக்கப்படல், அரசாங்கங்களின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களில் அனைத்து சமூகங்களும் உள்வாங்கப்படாமைப் போன்ற பல காரணிகளும் , கல்வி அறிவின்மைக்கு வழி வகுக்கின்றன.

> **கல்வி கற்றவர்கள், எழுத்தறிவற்றவர்களுக்கு இது சம்பந்தமான ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் போது, அது சமூக ரீதியாக ஒரு மாற்றத்தினை ஏற்படுத்தும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.**
> **பெற்றோர்களும், ஆசிரியர்களும் நலன் விரும்பிகளும், ஆர்வாளர்களும் மாணவர்களது எழுத்தறிவினை அதிகரிக்கக் கூடிய சகல விதமான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, இவற்றின் முக்கியத்துவத்தை இளம் சந்ததியினருக்கு எடுத்துக் கூறுவது அவசியம்**

இவ்வாறான பிரச்சினைகளிலிருந்து மீண்டு வருவது முக்கியமானதாகும் .

எழுத்தும், வாசிப்பும் ஒரு மனிதனின் இரு கண்கள்.

எழுத்தறிவினை அதிகரித்துக் கொள்வதற்கு வாசிப்பு மிகவும் இன்றியமையாதது.

வாசிப்பின் மூலமாகத் தான் பல்வேறு விடயங்களை எம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது.

அதுவே, ஒரு மனிதனை பூரணப்படுத்தும் என்றும் கூறுவர்.

இலங்கையில் அக்டோபர் மாதம் வாசிப்பு மாதமாகக் கருதப்படுகின்றது.

எழுத்தும், வாசிப்பும் ஒரு சமுதாயத்தில் காணப்படுகின்ற பட்சத்தில் அந்த சமுதாயத்தில் நிலவுகின்ற அறியாமையைக் களைந்தெறிய முடியும்.

அதுபோல, குழந்தைகளின் மரண வீதத்தைக் குறைப்பதற்கும், அதிகரித்து வரும் ஜனத் தொகையைக் கட்டுப்படுத்துவதற்கும், ஆண், பெண் பாலினத்தில் சமத்துவ தன்மையை ஏற்படுத்தவும், பல்வேறுபட்ட தொற்று நோய்களைத் தவிர்க்கவும், வாழ்க்கை நீடித்த கல்வியை மேம்படுத்தவும், நாட்டின், தனிமனிதனின் பொருளாதாரத்தை வளர்ச்சி அடையச் செய்யவும் , ஜனநாயகம், சமாதானத்தை நிலை நிறுத்தவும், வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தவும், சுய நம்பிக்கையை, சுய கௌரவத்தை அதிகரிக்கவும் எழுத்தறிவு அவசியம்.

வாசிப்பு, எழுத்தறிவின் மூலமாக மனிதன் தன்னை உணர்ந்து, தன் நிலையை உணர்ந்து, அதற்கேற்ப தன் வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ள முடியும்.

சமூக,பொருளாதார, பண்பாட்டு அம்சங்களைத் தனி மனிதனுக்கு இடையிலும், சமூகங்களுக்கிடையிலும் உயர்வடையச் செய்ய எழுத்தறிவு அவசியமாகும்.

கற்றவர்களின் எண்ணிக்கையும் உலகில் காணப்படுவதனால் இந்த தினத்தைக் கொண்டாடப்பட வேண்டிய அவசியமும், அதே வேளை சமூகத்தின் மத்தியில் ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டிய கடப்பாடும் காணப்படுகின்றது.

நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக இன்று உலகம் முழுவதும் தொலைக்கல்வி முறைமை, இணைய வழி மூலமான கல்வி, மெய் நிகர் கற்றல் முறைமை போன்றவைகளும் கொவிட்-19 க்குப் பிறகு ஏற்பட்ட முன்னேற்றகரமான செயற்பாடுகளாகும்.

பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய அமைப்பிலுள்ள (சார்க்) நாடுகளில் மாலைத்தீவின் எழுத்தறிவு வீதம் 99% மாகவும், ஸ்ரீலங்காவின் எழுத்தறிவு வீதம் 92% மாகவும் காணப்படுகின்றது.

இன்றைய நூற்றாண்டில் எழுத்தறிவை மேம்படுத்த பல்வேறுபட்ட வாய்ப்புகள் திறந்து விடப்பட்டுள்ளன.

இவற்றை பயன்படுத்த சகலரும் முன் வருவதோடு, கல்வி கற்றவர்கள், எழுத்தறிவற்றவர்களுக்கு இது சம்பந்தமான ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் போது, அது சமூக ரீதியாக ஒரு மாற்றத்தினை ஏற்படுத்தும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

பெற்றோர்களும், ஆசிரியர்களும் நலன் விரும்பிகளும், ஆர்வாளர்களும் மாணவர்களது எழுத்தறிவினை அதிகரிக்கக் கூடிய சகல விதமான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, இவற்றின் முக்கியத்துவத்தை இளம் சந்ததியினருக்கு எடுத்துக் கூறுவது அவசியம்.

"அறிவே சக்தி. தகவல் விடுதலை அளிக்கிறது. ஒவ்வொரு சமூகத்திலும், ஒவ்வொரு குடும்பத்திலும் முன்னேற்றத்தின் முன்னோடியாகக் கல்வி இருக்கிறது" என ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுச் செயலாளரான கொபி அன்னான் கூறிய கருத்து முக்கியமானதாகும்.

கவிஞர் கண்ணதாசன் கூறுவது போல,
"எல்லாரும் எல்லாமும்
பெற வேண்டும் - இங்கு
இல்லாமை இல்லாத நிலை
வேண்டும்"

இந்த நிலைமை கல்வியிலும் ஏற்படும் பட்சத்தில், சகலரும் அதன் பலனை அனுபவிக்க முடியும்.



அடிப்படை கல்வியறிவுடன் எண்ணியல் கல்வியறிவு, டிஜிட்டல், நிதி மற்றும் சட்ட கல்வியறிவு ஆகியவற்றுடன் அத்தியாவசிய வாழ்க்கைத் திறன்களை உள்ளடக்கிய முறைமையே முன்னேற்றத்தை ஏற்படுத்தும்.

---

# மலையக சிறுகதை போட்டி முடிவு திகதி நீடிப்பு





மலையக எழுத்தாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க போட்டி முடிவுத் திகதி செப்டெம்பர் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இளைய தலைமுறையினரிடம் வாசிப்பையும் எழுத்தாற்றலையும் மேம்படுத்தும் முகமாக அவுஸ்திரேலிய எழுத்தாளர் சங்கம் மலையக சிறுகதை முன்னோடிகளும் மலைநாட்டு எழுத்தாளர் மன்ற முன்னாள் தலைவர்களுமான அமரர் என்.எஸ்.எம்ராமையா, எஸ்.திருச்செந்தூரன் ஆகியோர் நினைவாக மலையக சிறுகதைப் போட்டி நடத்துகிறது.

இலங்கையின் எப்பகுதியிலும் வாழ்பவர்கள் கலந்துகொள்ளமுடியும். ஆனால் மலையக மக்களின் வாழ்வியலை மையமாகக் கொண்ட கதைகளே போட்டியில் தெரிவுசெய்யப்படும்.

இப்போட்டி தொடர்பாக அவுஸ்திரேலிய எழுத்தாளர் சங்கத்தின் தலைவரும் முன்னணி எழுத்தாளருமான மாத்தளை சோமு கருத்து தெரிவிக்கையில்,

கைபேசியின் ஆதிக்கத்தால் உலகம் முழுவதும் இளைய தலைமுறையினர் அதன் உள்ளே ஆழ்ந்து கிடக்கின்றனர். நூல் வாசிப்புப் பழக்கம் அருகி வருகின்றது. இந்நிலை மாற மூத்தோரும் அமைப்புகளும் அக்கறைகாட்ட வேண்டும். ஆகவே நாங்கள் மலையக சிறுகதைப் போட்டியை நடத்த முனைந்துள்ளோம்.

மொத்த பரிசுத்தொகை இரண்டு லட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதற் பரிசு 80,000ரூபாய், இரண்டாம் பரிசு 40,000ரூபாய், மூன்றாம் பரிசு 20,000ரூபாய், 5,000 ரூபாய் வீதம் 12 பரிசுகள் வழங்கப்படும்.

இம்முயற்சிக்கு சிட்னி வாழ் தமிழ் அன்பர்கள் பிரதேசம் கடந்து ஆதரவு வழங்கியுள்ளனர்.

மலையக மக்கள் இலங்கையில் 200 ஆண்டுகால வரலாற்றைக் கொண்டமையால் அதன் இலக்கியம் காலத்திற்குக் காலம் தட்டியெழுப்பப் படவேண்டும். அதன் அடிப்படையில் இந்தச் சிறுகதைப்போட்டி நடைபெறுகிறது. இதன் மூலம் அடுத்த தலைமுறைக்கான எழுத்தாளர்களை உருவாக்குவதே எமது நோக்கமாகும். பரிசளிப்பு விழா கொழும்பில் நடைபெறும். பரிசு பெறும் பன்னிரண்டு கதைகளை ஒன்றாகத் தொகுத்து நூலாகவெளியிட இருக்கின்றோம் என்றார்.

மலையக சிறுகதைப் போட்டியைச் சிறப்புற நடத்த பேராசிரியர் மு.நித்தியானந்தம் ஆதரவு வழங்கிவருகின்றார். மலையக நூல்களின் பதிப்பாசிரியர் எச்.எச்.விக்ரமசிங்க போட்டி இணைப்பாளராக பணியாற்றுகிறார்.

சிறுகதை எட்டு பக்கங்களுக்குள் கணினி தட்டச்சு 12 அளவில் யுனிகோட் சொற்களில் இருக்கவேண்டும்.

அனுப்பவேண்டிய மின்னஞ்சல்
ausawriter@gmail.com
hendry220649@gmail.com

அமெரிக்கா

532 நாட்கள் விடுமுறை எடுத்ததால்

# சர்ச்சையில் சிக்கிய பைடன்



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், தனது பதவிக்காலத்தில் 532 நாட்கள் விடுப்பு எடுத்தது தெரியவந்ததையடுத்து, இதுகுறித்து அந்நாட்டு எதிர்க்கட்சிகள் விமர்சித்து வருகின்றன.

எதிர்வரும் நவம்பர் மாதம் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் ஜனநாயக கட்சி சார்பில் கமலா ஹாரீஸ் மற்றும் குடியரசு கட்சி சார்பில் டொனால்ட் ட்ரம்ப் போட்டியிடுகின்றனர். தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் தேர்தலில் களமிறங்கினாலும், பின்னர் வயது முதிர்வு காரணமாக ஒதுங்கி கொண்டார்.

இந்நிலையில், 81 வயதாகும் அவர், கடந்த நான்கு வருடங்களில் எடுத்த விடுப்பு குறித்த தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, அவர் 532 நாட்கள் விடுமுறை எடுத்துள்ளார். அதாவது, அவர் பதவிக்காலத்தில் 40 சதவீத நாட்களை விடுமுறையில் கழித்துள்ளார். இது ஐந்து ஆண்டுகளில் சராசரி அமெரிக்க தொழிலாளி ஒருவருக்கு கிடைப்பதை விட அதிகம்.

தொழிலாளிக்கு ஆண்டுக்கு சராசரியாக 11 நாட்கள் விடுமுறை கிடைக்கிறது. இந்த கணக்குப்படி, ஜோ பைடன் 48 ஆண்டுகள் எடுக்க வேண்டிய விடுமுறையை 4 ஆண்டுகளில் எடுத்துள்ளார்.

இத்தனை நாட்கள் ஜோ பைடன் விடுமுறை எடுத்ததை அந்நாட்டு எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்துள்ளன. உலகளாவிய நிச்சயமற்ற சூழ்நிலை, உள்நாட்டில் பல்வேறு சவால்கள் நிலவி வரும் சூழலில் ஜனாதிபதி பதவியில் இருக்கும் ஒருவர் இத்தனை நாட்கள் விடுமுறை எடுப்பது சரியா என கேள்வி எழுப்பியுள்ளனர்.



வொஷிங்டன்

# செவ்வாய் கிரகத்தில் ஆளில்லா விண்கலம்

செவ்வாய் கிரகத்திற்கு ஆளில்லா விண்கலம் எதிர்வரும் 2026இல் அனுப்பப்படும் என ஸ்பேஸ் எக்ஸ் தலைவர் எலான் மஸ்க் அறிவித்துள்ளார்.

மனிதர்களை விண்வெளி சுற்றுலா அனுப்புவதற்கும், செவ்வாய் கிரகத்தில் என்ன உள்ளது என்பதை ஆய்வு செய்வதற்கும் எலான் மஸ்கிற்கு சொந்தமான ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் ஆர்வம் காட்டி வருகிறது.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை(08) எலான் மஸ்க் சமூகவலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“செவ்வாய் கிரகத்திற்கு ஆளில்லா விண்கலம் எதிர்வரும் 2026இல் அனுப்பப்படும். செவ்வாய் கிரகத்தில் தரையிறங்குவதற்கான நம்பகத்தன்மையை சோதிக்க, இவை பணியாளர்கள் இல்லாமல் இருக்கும். ஏழு ஆண்டுகளுக்குள் முதல் நபர் செவ்வாய் கிரகத்தில் கால் பதிப்பார்.

செவ்வாய் கிரகத்தில் 20 ஆண்டுகளில் அங்கு ஒரு நகரம் அமைக்கப்படலாம். 20 ஆண்டுகளில் தன்னிறைவு நகரத்தை உருவாக்கும் இலக்குடன் செயல்பட்டு வருகிறோம். வீரர்கள் யாரும் இல்லாத விண்கலம் ஐந்து ஆண்டுகளுக்குள் உருவாக்கப்படும்.

ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம் முதல் முறையாக மீண்டும் பயன்படுத்தக்கூடிய ரொக்கெட்டை உருவாக்கியது. இது பொருளாதார ரீதியாகவும் சாத்தியமானதாக மாறியது” என்றுள்ளார்.

நியூ மெக்சிகோ

சுனிதா, வில்மோர்

# பூமிக்குத் திரும்புவது எப்போது?

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட போயிங் ஸ்டார் லைனர் விண்கலம், சுனிதா வில்லியம்ஸ் மற்றும் வில்மோர் ஆகியோர் இல்லாமல் தரை இறங்கிய நிலையில், அவர்கள் இருவரும் பூமிக்குத் திரும்புவது எப்போது என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

முன்னணி விமான போக்குவரத்து நிறுவனமான போயிங் சார்பில் மனிதர்களை ஏற்றி செல்லும் விண்கலங்கள் உருவாக்கப்பட்டு அவை சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்திற்கு அனுப்புவதற்கான சோதனை ஓட்டம் நடத்தப்படுகிறது.

போயிங் ஸ்டார் லைனர் திட்டம் என பெயரிடப்பட்டுள்ள முதல் போயிங் விண்கலத்தின் சோதனை ஓட்டம் ஜூன் 5ஆம் திகதி நடைபெற்றது. சுனிதா வில்லியம்ஸ், புட்ஜ் வில்மோர் ஆகியோர் போயிங் விண்கலம் மூலமாக சர்வதேச விண்வெளி ஆய்வு மையம் சென்றனர்.

15 நாட்களுக்குள் பூமி திரும்ப வேண்டிய அவர்களின் பயணம், தொழில்நுட்பக் கோளாறு மற்றும் விண்வெளி குப்பைகள் காரணமாக பல மாதங்களுக்குத் தள்ளிப்போயுள்ளது. போயிங் விண்கலத்தின் ஹீலியம் கசிவு அதிக அளவில் ஏற்பட்டதன் காரணமாக திரஸ்டர்கள் செயல்படாத ஒரு நிலை இருந்ததாக நாசா தெரிவித்தது.

இதற்கிடையே, ஹீலியம் கசிவை சரி செய்வதற்கு சர்வதேச விண்வெளி வீரர்கள் மற்றும் பூமியில் இருந்து நாசா விஞ்ஞானிகள் மேற்கொண்ட முயற்சி பலனளிக்கவில்லை.

இந்நிலையில், திட்டமிட்டபடி போயிங் விண்கலம் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து பிரிந்து பூமியை நோக்கி வந்த நிலையில், இன்னும் நான்கு மாதங்கள் சுனிதா மற்றும் வில் மோர் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் இருப்பார்கள் என்றும் அடுத்த டிராகன் திட்டத்தில் அவர்கள் பூமிக்கு திரும்புவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் நாசா தெரிவித்துள்ளது.



சென்னை

இரட்டிப்பு மகிழ்ச்சியில்

# விஜய் கட்சி




தமிழக வெற்றிக் கழகத்தை அரசியல் கட்சியாக தேர்தல் ஆணையம் பதிவு செய்துள்ள நிலையில், முதல் மாநாட்டுக்கான அனுமதியையும் தமிழக பொலிஸார் வழங்கியுள்ளமை தொடர்பில் அக்கட்சியினரை இரட்டிப்பு மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

தமிழக வெற்றிக்கழக கட்சியின் தலைவரான விஜய், 2026ஆம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலை இலக்காக கொண்டு கட்சி செயல்படும் என்று கூறி இரசிகர்களையும், தமது ஆதரவாளர்களையும் உற்சாகப்படுத்தினார்.

இதற்கிடையே, விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி வீதியில் மாநாட்டை நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டு பொலிஸ் அனுமதி வேண்டி முறைப்படி விண்ணப்பமும் அளிக்கப்பட்டது.

கடந்த 28ஆம் திகதி மனு அளித்த நிலையில் பொலிஸ் அனுமதிக்காக பல நெருக்கடிகளை த.வெ.க., சந்தித்ததாக கூறப்படுகிறது. மொத்தம் 21 கேள்விகளை கேட்டு அதற்கான பதில்களையும் பொலிஸ் தரப்பில் கேட்கப்பட்டது.

ஆந்திரா

4 பேரை கொலை செய்த

# சீரியல் கில்லர் பெண்கள் கைது



ஆந்திராவில், 4 பேரை சயனைட் கலந்த பானத்தைக் குடிக்கவைத்து கொலை செய்த சீரியல் கில்லர் பெண்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆந்திரப் பிரதேசம் தெனாலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், முனகப்பா ரஜினி, மதியாலா வெங்கடேஸ்வரி, குர்லா ராமனம்மா.

நடுத்தர வயதைச் சேர்ந்த இவர்கள் மூவரும் திருட்டுத்தொழிலில் ஈடுபடுவதற்காக தெனாலி பகுதியில் உள்ளவர்களைக் குறிவைப்பார்களாம். பின்னர் அவர்களிடம் அன்பாகப் பேசி சயனைட் கலந்த குளிர்பானங்களைக் குடிக்க வைப்பார்களாம். அதை குடித்தவர்கள் சிறிது நேரத்திலேயே உயிரிழந்ததும் அவர்களிடம் இருக்கும் வெகுமதியான பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றுவிடுவார்களாம்.

இதுபோல், அவர்கள் கொடுத்த சயனைடை குடித்ததில் இதுவரை 4 பேர் உயிரிழந்துள்ளார்களாம். இதுதொடர்பாக ஆந்திர பொலிஸார் விசாரணை நடத்தி வந்த நிலையில், தற்போது இவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், சயனைடும் திருடப்பட்ட பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவர்களிடம் நடைபெற்ற தொடர் விசாரணையில், 32 வயதான மதியாலா வெங்கடேஸ்வரி என்பவர் 4 வருடங்களுக்கு முன்னர் கம்போடியா சென்று அங்கிருந்து பல சைபர் குற்றங்களில் ஈடுபட்டவர் என்பது கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தேசங்களுக்கான லீக்: மூன்று அணிகள் வென்றன



தேசங்களுக்கான லீக் தொடரில், அயர்லாந்தில் சனிக்கிழமை (07) நடைபெற்ற அவ்வணியுடனான குழு எஃப் போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து வென்றது.

இங்கிலாந்து சார்பாக, டெக்லன் றைஸ், ஜக் கிரெலிஷ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, தமது நாட்டில் ஞாயிற்றுக்கிழமை (08) நடைபெற்ற பொஸ்னியா மற்றும் ஹெர்ஸிகோவினாவுடனான குழு சி போட்டியில் 5-2 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்து வென்றதுடன், தம்நாட்டில் நடைபெற்ற ஹங்கேரியுடனான இன்னொரு குழு சி போட்டியில் 5-0 என்ற கோல் கணக்கில் ஜேர்மனி வென்றது.

# டென்னிஸ் சம்பியன்சிஷிப்; சென். பற்றிக்ஸ் பிரகாசித்தது

■ அஸ்ஹர் இப்றாஹிம்

இலங்கை பாடசாலைகள் டென்னிஸ் சம்மேளனம் ஒழுங்கு செய்திருந்த வட பிராந்திய பாடசாலைகளுக்கிடையிலான தேசிய டென்னிஸ் சம்பியன்சிஷிப் போட்டியில் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி பிரகாசித்தது.

இப்போட்டியில், பற்றிக்ஸின் நான்கு சிறுவர் டென்னிஸ் அணிகள் பங்கேற்ற நிலையில், றெட் போல் டென்னிஸ் அணி மற்றும் கீறீன் போல் கோல்ட் அணி ஆகியன சம்பியன்களாகவும், ஒரேஞ் போல் அணி இரண்டாமிடத்தையும், கிறீன் போல் சில்வர் அணி மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.












# மெய்வல்லுநர் போட்டி; முஹம்மட் ஹின்ஸான் முதலிடம்

■ எஸ்.அஷ்ரப்கான்

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியானது மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் சனிக்கிழமை (07) நடைபெற்றபோது 12 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 60 மீற்றர் ஓட்டப் போட்டியில் நிந்தவூர் அல் அஷ்றக் தேசிய பாடசாலை மாணவன் எம்.எச்.முஹம்மட் ஹின்ஸான் முதலாமிடத்தைப் பெற்றார்.



# ஓய்வு பெற்றார் மொயின் அலி

அனைத்து சர்வதேசப் போட்டிகளிலிருந்தும் தனது ஓய்வை இங்கிலாந்தின் சகலதுறைவீரர் மொயின் அலி அறிவித்துள்ளார்.

கடந்த 2014இல் அறிமுகத்தை மேற்கொண்ட 37 வயதான அலி, 68 டெஸ்ட்களில் 3,094 ஓட்டங்களைப் பெற்றதோடு 204 விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்தார். 138 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 2,355 ஓட்டங்களைப் பெற்றதோடு, 111 விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்தார். 92 இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளில் 863 ஓட்டங்களைப் பெற்றதோடு, 51 விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்தார்.




# ஸ்கொட்லாந்தை வெள்ளையடித்த அவுஸ்திரேலியா



இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில் ஸ்கொட்லாந்தை அவுஸ்திரேலியா வெள்ளையடித்தது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் வென்ற அவுஸ்திரேலியா, எடின்பேர்க்கில் சனிக்கிழமை (08) நடைபெற்ற மூன்றாவது போட்டியிலும் வென்றமையைத் தொடர்ந்தே 3-0 என ஸ்கொட்லாந்தை அவுஸ்திரேலியா வெள்ளையடித்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

ஸ்கொட்லாந்து: 149/9 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: பிரண்டன் மக்முல்லன் 56 (39), ஜோர்ஜ் முன்சீ 25 (17), மார்க் வற் 18 (12), மிஷெல் லீஸ்க் 13 (07), ஒலி ஹரிஸ் 12 (08) ஓட்டங்கள். பந்துவீச்சு: கமரொன் கிறீன் 3/35 [4], ஆரோன் ஹார்டி 2/18 [3], ஷோன் அபொட் 2/28 [4], மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் 1/14 [2], அடம் ஸாம்பா 1/28 [4])

அவுஸ்திரேலியா: 153/4 (16.1 ஓவ.) (துடுப்பாட்டம்: கமரொன் கிறீன் ஆ.இ 62 (39), மிற்செல் மார்ஷ் 31 (23), டிம் டேவிட் 25 (14), ட்ரெவிஸ் ஹெட் 12 (11), ஆரோன் ஹார்டி ஆ.இ 11 (06) ஓட்டங்கள். பந்துவீச்சு: பிரட் கரி 2/20 [3], கிறிஸ் சோல் 1/28 [3.1], ஜக் ஜார்விஸ் 1/22 [2], பிரண்டன் மக்முல்லன் 0/23 [3])

போட்டியின் நாயகன்: கமரொன் கிறீன்

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 09, செப்டெம்பர் 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.